Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, MAY 14, 2022

சனிக்கிழமை மே 14, 2022 | ஒளி: 07 கதிர் 304 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE




## ரூபாவின் மதிப்பு திடீரென உயர்ந்தது எவ்வாறு

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியை ரூ. 360.00 எனும் மட்டத்தில் ரூ. 2.60 வரையான ஏற்றத் தாழ்வுகளுடன் பேணுமாறு உள்நாட்டு வர்த்தக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் அறிவுறுத்தப்பட்டு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஐவர் அடங்கிய ஐ.தே.க குழுவை நியமித்தார் பிரதமர்

பொதுமக்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளில் நிலவும் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்து பொது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான யோசனைகளை பெற்றுக்கொள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஐவர் அடங்கிய விசேட குழுவை நியமித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# அரசாங்கத்தை பலப்படுத்துவதற்கு

# “டீல்”

### தூதரகங்களின் உதவியை நாடுகின்றார் பிரதமர் ரணில்

■ ஆர்.யசி

அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில் தற்போது புதிய அமைச்சரவை ஒன்றினை உருவாக்கிக்கொள்வதில் அவர் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்.

தொடர்ச்சி P2



## ரணில், கோட்டாவை தோற்கடிக்க வேண்டும்

ரணிலை கள்ளர், சூழ்ச்சிக்காரர், பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையடித்தவர் என பிரசாரம் செய்து ஆட்சியமைத்த ராஜபக்ஷவினர் ரணிலையே இன்று பிரதமராக்கி ஆட்சி செய்வது மிக்க கீழ்த்தரமான அரசியல் கலாசாரமாகும், எனவே ரணில், கோட்டாபய இருவரையும் தோற்கடிக்க வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இந்தியா, ஜப்பானிடம் இருந்து 3.5 பில்லியன் டொலர் நிதியுதவி

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர், அமெரிக்க, , சீன , மற்றும் ஜப்பான் தூதுவர்கள் உள்ளிட்ட முக்கிய இராஜதந்திரிகளை நேற்று (13) சந்தித்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து அவசர நிதி உதவியாக 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## அமைச்சரவைக்கு வாருங்கள் அழைத்தார் புதிய பிரதமர்

■ ஆர்.யசி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் அமைக்கும் புதிய அமைச்சரவையில் அமைச்சு பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு நாட்டை தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மீட்டெடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுக்கும் தனித்தனியே அழைப்பு விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



அமெரிக்க தூதுவர் ஜூலி சங்



இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே

புதிய பிரதமராக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, அமெரிக்க தூதுவர் ஜூலி சங், ஜப்பான் தூதுவர் ஹிடேகி மிசுகோஷி, சீன தூதுவர் சீ சென்ஹொங் ஆகியோரை நேற்று (13) சந்தித்து கலந்துரையாடியிருந்தார். நாட்டின் பொருளாதார மீட்சி, ஸ்திரத்தன்மை உள்ளிட்ட விடயங்களில் இந்த நாடுகளுடன் ஒன்றிணைந்து பயணிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.



சீன தூதுவர் சீ சென்ஹொங்



ஜப்பான் தூதுவர் ஹிடேகி மிசுகோஷி

## ரணிலை ஆதரிப்பதா எதிர்ப்பதா?

### மொட்டுக்குள் இருவேறு நிலைப்பாடு

### பொதுஜன முன்னணி இன்று ஜனாதிபதியுடன் பேச்சு

■ ஆர்.யசி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் புதிய அமைச்சரவையை உருவாக்கும் முயற்சியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஈடுபட்டுள்ள நிலையில் பிரதான எதிர்க்கட்சிகள் மற்றும் சுயாதீன அணிகள் அதனை நிராகரித்துள்ளன. இந்நிலையில் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து இன்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவிக்கவுள்ளனர் .

தொடர்ச்சி P2



## ரணில் பூச்சியம்

### ஆதரவு வழங்கோம் என்கிறது சஜித் தரப்பு

மக்களால் நிராகரிக்கப்பட்ட நபர்களை கொண்டு இந்த அரசாங்கத்தை முன்னெடுக்க முடியுமே தவிர பலமான அமைச்சரவையை உருவாக்க முடியாது. பாராளுமன்றத்தில் எமக்கே பெரும்பான்மை பலம் உள்ளது.

தொடர்ச்சி P2




## “நோ டீல் கம” உருவானது

“கோட்டா கோ கம”, “ மைனா கோ கம” ஆகியவற்றுடன் “நோ டீல் கம” வும் உருவானது. அலரிமாளிகைக்கு முன்பாகவே நேற்று (13) உருவாக்கப்பட்டுள்ளது.

இடைக்கால அரசாங்கத்துக்கு பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகைக்கு நேற்று (13) காலை சென்றார். அங்கு அவர், தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிலையிலேயே அவரது நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து “நோ டீல் கம” உருவாக்கப்பட்டுள்ளது.

## பிரதமர் ரணில் மீது நம்பிக்கையில்லை



ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கி புதிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ள போதிலும், இவர்களால் தற்போதைய நெருக்கடிக்கு ஸ்திரமான தீர்வை பெற்றுக்கொடுக்க முடியுமென்ற முட்டாள் தனமான நம்பிக்கை எமக்கு இல்லை. எனினும் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசாங்கத்தின் நல்ல வேலைத்திட்டங்களை ஆதரிப்போம் என அரசாங்கத்தில் இருந்து வெளியேறி சுயாதீன எதிரணியாக செயற்படும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## ரணிலின் அரசாங்கத்தில் நாங்கள் ஒருபோதும் பங்குதாரராக மாட்டோம்



ரணிலை பிரதமராக நியமித்து உருவாக்கப்பட்டுள்ள அரசாங்கத்தில் எந்த விதத்திலும் நாம் பங்குதாரர் ஆகமாட்டோம் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும், அமைச்சுப் பொறுப்புகளையோ அல்லது வேறு பொறுப்புகளையோ எடுக்க தயாரில்லை எனவும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மின்வெட்டும் இல்லை; மதுபானமும் இல்லை

வெசாக் தினங்களான எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது. எனினும், இன்று (14) சனிக்கிழமை ஐந்து மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என அறிவித்துள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும், எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மூடப்பட்டிருக்கும் என்று கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

## இலங்கைக்கு விசா வழங்குவதனை நிறுத்தவில்லை

### இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவிப்பு

இந்திய உயர் ஸ்தானிகராலயம், இந்திய கொன்சுலேட் ஜெனரல் அலுவலகங்கள் மற்றும் இந்திய துணை உயர் ஸ்தானிகராலயம் ஆகியவை விசா வழங்குவதனை நிறுத்தியிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகளை இந்திய உயர் ஸ்தானிகராலயம் முற்றாக நிராகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஐவர் அடங்கிய ஐ.தே.க குழுவை நியமித்தார் பிரதமர்

அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் திரவங்கள் தடையின்றி பொதுமக்களுக்கு வழங்குவதற்காக உரிய தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்த ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவும், மருந்து பொருட்கள் விநியோகத்தில் நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்துக்கொள்வதற்கு தொடர்புடைய தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்த கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜயவர்தனவும்,உரம் தட்டுப்பாடு மற்றும் அதற்கான தீர்வு தொடர்பில் ஆராய்ந்து யோசனைகளை முன்வைக்க கட்சியின் உபதலைவர் அகில விராஜ் காரியவசத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள் விநியோகத்தில் நிலவும் தட்டுப்பாடு மற்றும் அதற்கான தீர்வு தொடர்பில் ஆராய கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## ரணில், கோட்டாவை...

கோட்டாபய ராஜபக்ஷவின் குற்றங்களுக்கு எதிராக, கொலைகள், ஆட்கடத்தல்கள் மற்றும் மோசடிகளுக்கு எதிராக ரணிலால் செயற்பட முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் நேற்று(13) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறியிருந்தார். அவர் மேலும் கூறுகையில்,

இப்போது அமையப்பெற்றுள்ள அரசாங்கமானது கோட்டாபய ராஜபக்ஷவினதும், ரணில் விக்கிரமசிங்கவினதும் கபடத்தனமான செயற்பாட்டால் உருவாக்கப்பட்டதாகும். பாராளுமன்றத்துக்கு தெரிவாவதற்கு கூட மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ள முடியாத அவரால் நாட்டை ஆட்சிசெய்ய முடியாது என்றார்.

நீண்ட நாட்களுக்கு முன்னரே ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் புறக்கணித்துவிட்டனர். அதேபோல் தனக்கு வாக்களித்த சகல தரப்பினராலும் நிராகரிக்கப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ, ரணிலுடன் இணைந்து ஆட்சியை கொண்டு நடத்துவதானது எந்தவொரு ஜனநாயக அடிப்படையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

அதுமட்டுமல்ல, 2018ஆம் ஆண்டு சூழ்ச்சியின் மூலமாக அரசாங்கத்தை கைப்பற்றியமைக்கு ஒப்பாகவே இப்போதும் அரசாங்கமொன்றை உருவாக்கியுள்ளனர். அப்போது எதிரணியில் இருந்தவர்களை கொண்டு அரசாங்கத்தை அமைத்ததை போலவே இப்போதும் எதிர் முகாமில் உள்ள ஒருவருக்கு பிரதமர் பதவியை கொடுத்து அரசாங்கமொன்றை அமைத்துள்ளனர். ஆகவே ஜனாதிபதிக்கு வழங்கிய ஒட்டுமொத்த மக்கள் ஆணையையும் மீறியே இப்போது அவர் தீர்மானம் எடுத்துள்ளார்.

நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு பெருமளவிலான பங்கை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்க வேண்டும் எனவும், ரணில் மத்திய வங்கியை கொள்ளையடித்த கள்ளர், நாட்டின் வளங்களை விற்றார் எனக் கூறியே ராஜபக்ஷவினர் அரசாங்கத்தை அமைத்துக்கொண்டனர். அவ்வாறு கூறியவர்கள் இன்று ரணிலுடன் இணைந்து அரசாங்கத்தை அமைத்துக்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் குற்றங்களுக்கு எதிராக, கொலைகள், ஆட்கடத்தல்கள் மற்றும் மோசடிகளுக்கு எதிராக செயற்பட ரணிலால் முடியுமா? வெள்ளை வான் கலாசாரத்தை உருவாக்கியவர்களுடன் கைகோர்த்து எவ்வாறு அரசாங்கத்தை முன்னெடுக்க முடியும். ஆகவே இந்த கீழ்த்தரமான அரசியலை முழுமையாக தோற்கடிக்க வேண்டும். இவர்கள் அமைக்கும் அமைச்சரவைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏலத்தில் விலைபோவார்கள். எனவே காத்திருந்து பார்ப்போம் என்றும் குறிப்பிட்டார்

## அமைச்சரவைக்கு வாருங்கள்...

புதிய பிரதமராக பதவியேற்ற ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நேற்றைய தினம் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி, பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் விமல்,உதய, வாசு தலைமையிலான அணியினர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ளிட்ட ஏனைய மலையகக் கட்சிகளுக்கு தனித்தனியே அழைப்பு விடுத்துள்ளார்.

ஒரு சிலருடன் நேரடியாக தொலைபேசியிலும் உரையாடியுள்ளார். எனினும் ரணிலின் அழைப்பை பிரதான கட்சிகள் நிராகரித்துள்ளதுடன் ஒரு சிலர் மறைமுகமாக ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

## 3.5 பில்லியன்...

புதிய பிரதமராக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட ரணில் விக்கிரமசிங்க இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை சந்தித்திருந்தவுடன் நாட்டின் பொருளாதார மீட்சி, ஸ்திரத்தன்மை உள்ளிட்ட விடயங்களில் இருநாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்றுவது குறித்தும் இலங்கைக்கான பொருளாதார ஒத்துழைப்புக்களை வழங்குவதன் நிலைப்பாடுகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இலங்கைக்கு வழங்கும் அவசர நிதியில் இருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குமாறு ரணில் வலியுறுத்தியுள்ள நிலையில் அதனை பெற்றுக்கொடுப்பதற்கான இணக்கப்பாட்டை இந்தியா தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

அதேபோல் ஜப்பான் தூதுவர் ஹிடேகி மிசுகோஷியுடனான சந்திப்பின் போதும் இலங்கை ஜப்பான் நாடுகளுக்கு இடையிலான வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளதுடன், அவசர நிதியுதவியின் கீழ் 2 பில்லின அமெரிக்க டொலர் கடன் பெற்றுக்கொள்ளவும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதற்கும் ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது. அதேபோல் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் உடனும் பிரதமர் கலந்துரையாடியுள்ளார்.

## ரூபாவின் மதிப்பு திடீரென உயர்ந்தது எவ்வாறு

இதர வெளிநாட்டு நாணயப் பெறுமதிகளும் இந்த அமெரிக்க டொலர் பெறுமதிக்கு நிகரான வகையில் பரிமாற்று மட்டத்தில் பேணப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இன்றைய தினம் உள்நாட்டு வங்கிகளில் அமெரிக்க டொலரின் விற்பனைப் பெறுமதி ரூ. 365 மட்டத்தில் காணப்பட்டது. நேற்றைய தினம் இந்தப் பெறுமதி ரூ. 380 வரை நிலவியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கற்பிட்டி பகுதியில் அமைந்துள்ள தீவுகளில் ஒன்றான உச்சிமுனை தீவு சுவிட்சர்லாந்து நாட்டின் நிறுவனமொன்றுக்கு 30 வருட காலத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளமை காரணமாக இலங்கை ரூபாயின் மதிப்பு உயர்ந்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் தகவல்களில் உண்மை எதுவுமில்லை எனவும், புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றவுடன் இந்த பெறுமதி அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் பரப்பப்பட்டிருந்தன அதற்கும் இந்த ரூபாய் மதிப்பு உயர்வுக்கும் சம்பந்தம் இல்லை என்பதும் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையினூடாக உறுதியாகின்றது.

# அரசாங்கத்தை பலப்படுத்துவதற்கு “டீல்”



இந்நிலையில் வெவ்வேறு நாடுகளுக்கான இலங்கை தூதுவர்கள் முலமாக இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளின் முக்கிய உறுப்பினர்களை தொடர்புகொண்டு இணக்கப்பாடு ஒன்றினை எட்டுவதற்கான முயற்சியில் அதி தீவிரமாக ஈடுபட்டு வருவதாக நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்த பின்னர் நாட்டில் ஏற்பட்ட அராஜக நிலைமை மற்றும் அவசரகால சட்டத்தை பிறப்பித்து மக்களின் வன்முறை செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்தில் இருந்தே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடி வந்ததுடன் அவரையே பிரதமராக நியமிக்க தீர்மானித்து இருந்ததாகவும், இது குறித்து ராஜபக்ஷவினருக்கு மிக நெருக்கமான வெளிநாடுகளுக்கான இலங்கை தூதுவர்களுடன் கலந்துரையாடியதாகவும் தெரிய வருகின்றது.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க தான் பிரதமராக பதவி ஏற்றுக்கொள்ள முன்னரே ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுடனும், ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பஷில் தரப்பினருடனும் கலந்துரையாடியுள்ளார். அதேபோல் வெவ்வேறு தரப்புடனும் அவர் கலந்துரையாடியுள்ளார்.

எனினும், அவர்கள் புதிய அமைச்சரவையில் இணைந்துகொள்வதற்கான இணக்கப்பாட்டுக்கு வராத நிலையில் வெவ்வேறு தூதுவர்கள் மூலமாக “டீல்" செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போதும் எதிர்க்கட்சியின் பிரதான நபர்கள் எனக் கருதப்படும் தகுதிவாய்ந்த அரசியல் தலைமைகளுடன் வெவ்வேறு நாடுகளின் தூதுவர்கள் கலந்துரையாடி வருவதாகவும், இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதியும் உயர் ஸ்தானிகருமான வேலுப்பிள்ளை கனநாதன், ரணிலுக்கு உறுப்பினர் எண்ணிக்கையை பெற்றுக்கொடுக்கும் விதமாக எதிர்க்கட்சியின் பல உறுப்பினர்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களுடனுன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் ஒரு சிலரை இணக்கத்துக்கு கொண்டுவந்துள்ள போதிலும் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமைகள் மற்றும் ராஜபக்ஷ மீதான மக்கள் எதிர்ப்பு காரணமாக இறுதி நேரத்தில் அவர்கள் பின்வாங்கியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து உறுதிப்படுத்த முடிந்துள்ளது.

## ரணிலை ஆதரிப்பதா எதிர்ப்பதா ?

இன்று காலை 9 மணிக்கு ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினருக்கும் இடையில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலின் போது கட்சியின் கொள்கை ரீதியிலான நிலைப்பாடுகள், மற்றும் மக்கள் ஆணை என்பன குறித்தும் கேள்வி எழுப்பவுள்ளதாக பொதுஜன முன்னணியின் ஒரு தரப்பினர் தெரிவித்துள்ளனர். எனினும் பஷில் ராஜபக்ஷவின் அணியாக செயற்படும் தரப்பினர் பிரதமர் ரணிலின் தலைமையிலான அமைச்சரவையில் பங்குபற்ற இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பஷில் ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து, அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

## ரணில் பூச்சியம்

முடிந்தால் பாராளுமன்றத்தில் 113 பெரும்பான்மையை நிரூபித்துக்காட்டுங்கள் என ரணில் விக்கிரமசிங்கவிற்கு சவால் விடுகின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். கொழும்பில் நேற்று (13) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் அமைப்புக்கு அமையவே தான் செயற்படுவேன் என ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் மக்களால் தெரிவுசெய்யப்படாத ஒருவரை பிரதமராக்கி அரசியல் அமைப்பிற்கு முரணாகவே ஜனாதிபதி செயற்பட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்க என்பவர் வெறும் பூச்சியம், அவருக்கு மக்கள் ஆணை ஒருபோதும் கிடைக்கவில்லை.

அதேபோல் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்தால் தான் பதவி விலகவேண்டிவரும், ஆகவே ரணிலை பிரதமராக்கினால் மட்டுமே என்னால் தொடர்ந்தும் இந்த நாட்டில் ஜனாதிபதியாக இருந்துகொண்டு நாட்டை நாசமாக்க முடியும் என்ற நோக்கத்திலேயே அவர் சஜித்தின் கோரிக்கையை நிராகரித்தார். ரணிலை பிரதமராக்கி ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாக்கவே கோட்டாபய ராஜபக்ஷ நினைக்கின்றார்.

ஊழல் வாதிகளுக்கு பாதுகாவலனாக ரணில் மாறியுள்ளார்.

இவர்களின் அமைச்சரவையில் அங்கம் வகிக்க நாம் ஒருவரும் தயாரில்லை. எமது 68 உறுப்பினர்களும் மற்றும் சுயாதீனமான 40 உறுப்பினர்களும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளோம். அதேபோல் அரசாங்கத்தில் 10 பேர் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஆகவே, எமக்கே பெரும்பான்மை பலம் உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவினால் 113 பெரும்பான்மையை நிரூபிக்க முடியுமானால் நிரூபித்துக்காட்டுங்கள் என சவால் விடுகின்றோம். சிறுபான்மை அரசாங்கத்தை வைத்துக்கொண்டு நகர முடியாது. மக்களால் நிராகரிக்கப்பட்ட நபர்களை கொண்டே அரசாங்கத்தை கொண்டுநடத்த முடியுமே தவிர பலமான அமைச்சரவையை உருவாக்க முடியாது என்றார்.

## ரணிலை நியமித்தமைக்கு ...

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர், கொழும்பில் நேற்று (13) நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தமது நிலைப்பாட்டை தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினர். இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கூறுகையில்,

சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்து அதனுடன் இணைந்து தேசிய சபையை உருவாக்கி சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும், அதேபோல் தேசிய சபையின் ஒத்துழைப்புடன் பிரதமர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக இருந்தது. ஆனால் தற்போது ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கி புதிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ளனர். ரணிலை பிரதமராக்கினால் தற்போதைய நெருக்கடிக்கு ஸ்திரமான தீர்வு கிடைக்கும் என்ற முட்டாள் தனமான நம்பிக்கை எமக்கு இல்லை. இன்றைய நெருக்கடிக்கு அவரும் காரணக்கர்த்தா என்பதை மறுக்க முடியாது என்றார்.

அவரது நான்கு ஆண்டு ஆட்சியில் தான் நாடு நாசமாகியது. அதிக கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இவற்றை கூறிவிட்டு தற்போதைய அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் நோக்கம் எமக்கில்லை. இவர்கள் முன்னெடுக்கும் ஆரோக்கியமான வேலைத்திட்டங்களில் எமது ஒத்துழைப்புகள் வழங்கப்படும். நாம் சுயாதீன எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு அரசாங்கத்தின் நல்ல வேலைத்திட்டங்களை ஆதரிப்போம். ஆனால் மக்களின் நெருக்கடி நிலைமையை சாட்டாக வைத்துக்கொண்டு சர்வதேசத்திற்கு நாட்டை விற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு பசில் ராஜபக்ஷ செய்ய முற்பட்டதை செய்ய முயற்சிக்கக்கூடாது. ஆனால், பஷில் ராஜபக்ஷ என்பவர் சால்வை போட்ட ரணில், அதேபோல் ரணில் என்பவர் டை கோட் அணிந்த பஷில் என்பதே எனது நிலைப்பாடு என்றார்.

செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த உதய கம்மன்பில எம்.பி கூறுகையில் :- நாட்டுக்கு அரசாங்கம் அவசியம், ஆகவே இந்த அரசாங்கத்தை வீழ்த்த நாம் முயற்சிக்க மாட்டோம் ஆனால், இவர்களால் நாட்டை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கில்லை. ரணிலின் கடந்தகால அரசியல் வரலாறு என்ன என்பது எமக்கு நண்பராக தெரியும் என்றார்.

## நாங்கள் ஒருபோதும் பங்குதாரராக மாட்டோம்

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி நேற்று (13) கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கி உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கத்தில் அமைச்சரவையில் இணைத்து கொள்ளுமாறும், அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஜனாதிபதி மற்றும் பிரதமரால் எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், ரணிலை பிரதமராக்கி தற்போது உருவாக்கப்பட்டுள்ள அரசாங்கத்தில் எந்த விதத்திலும் நாம் பங்குதாரர் ஆகமாட்டோம் என்ற தீர்மானத்தை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி எடுத்துள்ளது. ஆகவே அமைச்சு பொறுப்புக்களையோ அல்லது வேறு பொறுப்புக்களையோ எடுக்க நாம் தயாரில்லை. நாம் சர்வகட்சி அரசாங்கத்தையே எதிர்பார்க்கின்றோம். எமது கோரிக்கையாகவும் அதனையே முன்வைத்திருந்தோம்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காணவேண்டும். மக்கள் பட்டினியில் உள்ளனர், இதற்கு உடனடியாக தீர்வு காண வேண்டும். பாராளுமன்றத்தில் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து தீர்வு காண வேண்டும். மக்களுக்காக சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய பொறுப்பு சகல கட்சிகளுக்கும் உள்ளது. எனவே, அடுத்த பாராளுமன்ற கூட்டத்துக்கு முன்னர் சகல தரப்புடனும் பேசி இது குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ராஜபக்ஷர்களை பலப்படுத்த வேண்டிய அவசியம் எமக்கில்லை, மாறாக மக்களின் பக்கமே எப்போதும் நிற்போம் என்றார்.

## இலங்கைக்கு விசா வழங்குவதனை நிறுத்தவில்லை

தமது விசா பிரிவில் பணியாற்றுபவர்களில் பெருமளவானவர்கள் இலங்கை பிரஜைகளாக இருப்பதுடன் கடந்த சில நாட்களாக அவர்கள் அலுவலகத்துக்கு வருகைதர முடியாமை காரணமாக, நடைமுறை ரீதியான சில தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. வழைமைபோல எமது செயற்பாடுகளை விரைவில் மேற்கொள்வதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுத்துள்ளோம் எனவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தியாவுக்கான பயணத்தை இலங்கையர்கள் இலகுவாக மேற்கொள்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் நாம் உறுதிபூண்டுள்ளோம். இலங்கையில் இந்தியர்களுக்கு கிடைக்கும் வரவேற்பை போலவே இலங்கையர்களும் இந்தியாவில் வரவேற்கப்படுகின்றார்கள்.



# ரணிலின் முள்கிரீடம்

## ஒரேயொரு எம்.பி; ஆனாலும் பிரதமர்

2019ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்தும், கட்சிக்கு கிடைத்த ஒரே ஒரு எம்.பி–ஐ வைத்துக்கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றிருக்கிறார். இலங்கையில் அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்கே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் வியாழக்கிழமை (12) பிரதமராக பொறுப்பேற்றார்.



2019-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்தும், கட்சிக்கு கிடைத்த ஒரே ஒரு எம்.பி-ஐ வைத்துக்கொண்டு. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றிருக்கிறார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றிலும் ஒரே எம்.பி-ஐ வைத்துக்கொண்டு பிரதமர் நாற்காலியை அலங்கரித்திருக்கிறார் ரணில்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மே. 9 ஆம் திகதி தன்னுடைய பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை புதிய பிரதமராக பதவி ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். ஆனால், அவரோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலக வேண்டும் உள்ளிட்ட சில நிபந்தனைகளை முன்வைத்தார்.

1977-ம் ஆண்டு முதல் தொடர்ந்து பாராளுமன்றத்துக்கு தெரிவாகினார். ரணில் விக்கிரமசிங்க. ஆனால், 2019-ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் யாரும் எதிர்பாராத வகையில் ரணில் விக்ரமசிங்கவும், அவரின் ஐக்கிய தேசியக் கட்சியும் படும் தோல்வியடைந்தது. மேலும், ஒரே ஒரு பாராளுமன்ற இருக்கையை கூட அவரின் கட்சியால் பெறமுடியவில்லை.

எனினும், நாடு முழுவதுவும் கட்சிக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தது. இதனை யாருக்கு வழங்குவது என்ற விவாதம் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நடந்து வந்த நிலையில், கட்சியின் தலைவருக்கே அந்தப் பதவியை வழங்க வேண்டும் என அந்தக் கட்சியின் செயற்குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வைத்துக்கொண்டுதான், பாராளுமன்றத்துக்குள் மீண்டும் நுழைந்தார் ரணில் விக்ரமசிங்க. தனியொருவராக பாராளுமன்றத்துக்கு வந்தாலும் அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டுவதுடன், நாட்டின் நிலைமைகளையும் பாராளுமன்றத்தில் தொடர்ந்து பேசிவந்தார் ரணில்.

இந்த நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு தீர்வு வழங்குவதற்காக அமைக்கப்படவிருக்கும் இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக பதவி ஏற்றுக்கொண்டார். பிரதமராக ரணில் பதவியேற்பது இது ஆறாவதுமுறை.

எஸ்மண்ட் விக்ரமசிங்க, நளினி விக்ரமசிங்க ஆகியோருக்கு 1949-ம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி பிறந்தவர் ரணில். கொழும்பு ரோயல் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை கற்றவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது உயர்கல்வியை பயின்றார்.



இதனையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் களனி தொகுதி பிரதான அமைப்பாளராக 1970-ம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டு, பின்னர் 'பியகம' தொகுதியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன்பின்பு, 1977-ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் பியகம தொகுதியில் வெற்றிபெற்று பாராளுமன்றத்துக்கு அதே வருடத்தில் அமைச்சராகவும் பதவி வகித்தார்.


1993 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்கே பிரேமதாச கொலை செய்யப்பட்டதால், இடைக்கால ஜனாதிபதியாக டி.பி. விஜேதுங்க நியமிக்கப்பட்டதுடன், 1993-ம் ஆண்டு மே மாதம் ஏழாம் திகதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

1999-ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க முதன்முறையாக போட்டியிட்டு தோல்வியடைந்தார். அதனைத் தொடர்ந்து, 2001 டிசெம்பர் 5-ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதால், 2001 டிசெம்பர் 09-ம் திகதி ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். எனினும், 2004 ஏப்ரல் 2-ம் திகதி வரையே பதவி வகித்தார். மீண்டும் 2005 நவம்பர் 17-ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டாலும் மஹிந்த ராஜபக்ஷவிடம் தோல்வியடைந்தார்.

இதனையடுத்து, 2015-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ரணில் - மைத்திரி கூட்டணி வெற்றிபெற்றதை அடுத்து, மூன்றாவது முறையாக ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். 2015-ம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, அப்போது நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றதன் ஊடாக, நான்காவது முறையாகவும் ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.



எனினும், 2018 ஒக்டோபர் மாதம் ஆட்சிக் கவிழ்ப்பு சூழ்ச்சி மூலம் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை, பிரதமராக்கினார். ஆனால், உயர் நீதிமன்ற உத்தரவு காரணமாக ரணில் விக்ரமசிங்க ஐந்தாவது தடவையாகவும் பிரதமராக நியமிக்க ப்பட்டிருந்தார்.



இதனைத் தொடர்ந்து 2019-ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ, வெற்றி பெற்றதையடுத்து, பிரதமர் பதவியிலிருந்து விலகிய ரணில் விக்மசிங்க, அந்த ஆட்சியின் கீழ் நடத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்தார்.

1977-ம் ஆண்டு பாராளுமன்ற அரசியலுக்கு வந்தபிறகு ரணில் எந்தவொரு பொதுத்தேர்தலிலும் தோல்வி அடைந்ததில்லை. 42 வருடங்களாக தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து சாதனையும் படைத்திருக்கிறார். 2020-ம் ஆண்டு தோல்வியைத் தழுவினாலும் கட்சிக்கு கிடைத்த தேசியப்பட்டியல் ஊடாக மீண்டும் பாராளுமன்றம் வந்தார்.

இந்த நிலையில், இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வந்த பின்னணியில், ரணில் விக்ரமசிங்கவின் ஆளுமை மற்றும் அவரின் அனுபவம் காரணமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆட்சியில் இன்று அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்ப ட்டிருக்கிறது.

6 ஆவது முறையாகப் பிரதமராக பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, இதுவரை ஒரு முறைக்கூட அந்தப் பதவியில் முழுமையாக இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ரணில் முன் இருக்கும் சவால்கள் என்னென்ன?

இப்போது ரணில் முன் உள்ள சவால்கள் இரண்டு. ஒன்று அரசியல் உறுதிப்பாடு. அடுத்தது பொருளாதாரம்.

எதிரவரும் செவ்வாய்க்கிழமை (17) பாராளுமன்றத்தில் அவர் தனது அரசாங்கத்துக்கான பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். ஏற்கெனவே அவரது ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி விஷயத்தில் பல எம்.பி-க்கள் அதிருப்தியில் இருப்பதால், அவர்கள் ரணிலை ஆதரிப்பார்களா என்றும், எதிர்க்கட்சி வரிசையில் இருப்போர் அவருக்கு ஒத்துழைப்பார்களா என்றும் தெரியவில்லை.

இந்நிலையில், பிரதமராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர், கொள்ளுப்பிட்டியில் உள்ள விஹாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரணில், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை தனக்கு இருக்கிறது எனக் கூறுகிறார். அவர், அதில் வெல்லும் நிலைமையே இருக்கிறது.

மறுபக்கம் இப்போது தட்டுப்பாடாக இருக்கும் மருந்துப் பொருள்கள், உணவு, சமையல் எரிவாயு ஆகியவற்றை மக்களுக்கு கிடைக்கும் ஏற்பாடுகளை உடனே செய்யவேண்டும். மக்களின் ஆத்திரத்தை தணிக்க அவர் செய்யவேண்டிய முதல்வேலை இது என்றார்.

பிரதமராக ரணில் பதவியேற்றதும். அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகள் அவருக்கு வாழ்த்து தெரிவித்திருக்கின்றன.

பிரதமராக தனது முதல் பயணமாக இந்தியா செல்லவிருக்கிறார் ரணில். மோடியுடன் பேசி முக்கியமான அடிப்படைப் பிரச்னைகளை அவர் தீர்க்கும் முயற்சிகள் தெரிகின்றன. எனினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் வெளியாகவில்லை

பிரதமர் பதவி எனும் முள்கிரீடத்தை தலையில் ஏந்தியிருக்கும் ரணில், அவரது அனுபவத்தை முழுமையாகப் பயன்படுத்தி இலங்கைச் சிக்கலைத் தீர்த்தால், அடுத்த ஜனாதிபதி அவர் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

என்ன செய்யப்போகிறார் ரணில்... பொறுத்திருந்து பார்ப்போம்!

(நன்றி விகடன்)



# இந்தியாவின் தாராள மனம்



ஜே.ஏ.ஜோர்ஜ்
jantongeorge@gmail.com


நாளுக்கு நாள் இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீவிரமாகி கொண்டே போகிறது. அத்தியாவசிய பொருட்களின் விலையும் தொடர்ந்து ஏற்றத்தில் உள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி ஒரு மாதமாக காலிமுகத் திடலில் போராட்டம் நடைபெற்று வருகிறது. போராட்டங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் பிரதமர் பதவியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ வும் பதவி விலகியுள்ளார்.

1948-இல் பிரிட்டனிடம் இருந்து விடுலை பெற்ற பிறகு இலங்கை தற்போதுதான் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கின்றது.

இந்த நிலையில், நெருக்கடியைச் சமாளிக்க இந்தியா போன்ற நாடுகளில் இலங்கை கூடுதலாகக் கடன் வாங்குவதுடன், சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறவும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன..

உலக வங்கியின் மதிப்பீட்டின்படி இலங்கையைப் பொறுத்தவரை 2020 மார்ச் மாதத்தில் 2.3 பில்லியனான அந்நிய செலவாணி குறைந்திருந்தது. தொடர்ந்து வந்த காலங்களில் அந்த எண்ணிக்கை தொடர்ந்தும் சரிந்தே வந்திருக்கின்றது.

சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் நிதி உதவியையே இலங்கை தற்போது நம்பியிருப்பதுடன், இவற்றைக் கடந்து முதல் முறையாக ஐஎம்எஃப் என அழைக்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தையும் இலங்கை அணுகியிருக்கிறது.

சர்வதேச செலாவணி நிதியும் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் கடன்களைக் கொடுத்துவிடக் கூடிய அமைப்பு அல்ல. பொருளாதாரத்தை மீட்டெடுக்க வரிகளை உயர்த்த வேண்டியது சர்வதேச செலாவணி நிதியத்தின் முதல் விதியாக இருக்கலாம்.

இதனால் பொதுமக்களுக்கு விதிக்கப்படும் வரிகள் கணிசமாக உயரக்கூடும். பல்வேறு வகையான இலவச, குறைந்தவிலை சமூக நலத் திட்டங்களில் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நேரிடும்.

இந்த நிலையில். ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை இந்தியா வழங்கியுள்ளது. இலங்கையின் தற்போதைய கடுமையான நெருக்கடியான காலகட்டத்தில் நட்பு நாடான இந்தியா அவசர உதவி மற்றும் கடன் உதவிகளை தாரளாமாக வழங்கி வருகிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷக்கும் இடையிலான இருதரப்பு உறவின் அடையாளமாக இது பார்க்கப்படுவதுடன, அண்டை நாடுகளுக்கு இடையேயான நம்பிக்கை மற்றும் பரஸ்பர ஒற்றுமையின் வெளிப்பாட்டை எடுத்து காட்டுகின்றது.

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் இந்தியக் கடனை வழங்குவது குறித்து முன்னால் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் இந்திய அதிகாரிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையின் போது, நான்கு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

இலங்கைக்கு இறக்குமதி



செய்யப்படும் உணவு, மருந்து மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் இதில் முக்கிய இடத்தை பெற்றிருந்தது.

இரண்டாவது, எரிபொருள் இறக்குமதி செலவுகளை ஈடுசெய்யும் கடன்கள் திட்டம், மற்றும் திருகோணமலை எரிபொருள் சேமிப்பு வளாகத்தின் விரைவான நவீனமயமாக்கல் என்பவை அடங்கும்.

அத்துடன், இலங்கைக்கு கொடுப்பனவு சமநிலையை தீர்ப்பதில் உதவுவதற்கும், பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு பல்வேறு துறைகளில் இந்திய முதலீட்டை எளிதாக்குவதற்கும் பரிவர்த்தனை பரிமாற்றமும் உள்ளடங்கும்.

இவ்வாறு வழங்கப்பட்ட கடனை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தவணை முறையில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் நிபந்தை விதிக்கப்பட்டிருந்தது.

இலங்கைக்கு அவசர உதவியாக இந்தியா வழங்கிய இந்த கடனுக்கான வட்டி வீதம் மிகவும் குறைவானது என்றாலும், இந்தக் கடனின் கீழ் இறக்குமதி செய்யக்கூடிய பொருட்களை தீர்மானிக்கும் அதிகாரம் நிதியமைச்சுக்கே வழங்கப்பட்டிருந்தது.

இந்திய-இலங்கை நிவாரணப் பொதியானது 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகமான ஒன்றாகவே காணப்படுகின்றது. எரிபொருள் இறக்குமதிக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா தனியாக வழங்கியிருந்தமை நினைவுகூறத்தக்கது.

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்த நிலையில், இலங்கை மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியத்தை கருத்தில் கொள்ளும்போது, இந்தியாவிடமிருந்து பெறப்பட்ட கடன் நிவாரணம் பெரும் நிவாரணமாகவே காணப்பட்டது.

எனினும், இந்தியாவிடம் இருந்து எரிபொருளுக்கான கடனை பெற்றுகொண்ட பின்னரும் நாட்டில் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. ஆனால், இந்தியாவில் இருந்து பெட்ரோலியம் வாங்குவதற்கான கடன் கையிருப்பு முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் பரவாலாக முன்வைக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர், கடந்த ஆண்டின் நடுப்பகுதியில், சூரிய ஒளி மின் உற்பத்திக்காக இந்தியா 100 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்க இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆனால், அதனை நடைமுறைப்படுத்த இலங்கை தவறிவிட்டது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ வின் அரசாங்கம்



ஆட்சிக்கு வந்தவுடன், இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சிக்காக இந்தியப் பிரதமர் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக அறிவித்த போதும், அந்த தொகைக்கான ஒப்பந்தம் இன்னும் கையெழுத்தாகவில்லை. இந்த விடயம் இன்றுவரை கேள்விக்குறியாகவே நீள்கின்றது.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கான ஏராளமான திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதுடன், மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்தி, விமான நிலையங்களின் நிலையங்கள் அபிவிருத்தி உள்ளிட்ட வர்த்தக ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுநோய் காரணமாக பல்வேறு நாடுகளில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டுள்ளதுடன், சர்வதேச அளவில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்து வருகிறது. சிறிய நாடுகள் பொருளாதார சரிவை சந்தித்துள்ள அதேவேளை, சக்திவாய்ந்த நாடுகள் தங்கள் பொருளாதாரத்தை புதிய வடிவில் கட்டமைக்க முயல்கின்றன.

அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அதிக முதலீடு செய்ய முயற்சிக்கும் இந்தக் காலப்பகுதியில் இலங்கை போன்ற சிறிய நாடுகள் அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி தனது பொருளாதாரத்தை வலுப்படுத்திக்கொள்வது மிகவும் முக்கியம்.கொரோனா தொற்று நோயினை காரணம் காட்டி, தனது பிழையான கொள்கை திட்டங்களை நடைமுறைப்படுத்திய இலங்கையின் அண்மைய கால ஆட்சியாளர்கள் விட்ட தவறுகளை திருத்திக்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழும்பும் நடவடிக்கையை அடுத்து உருவாகவுள்ள அரசாங்கமாவது முன்னெடுக்க வேண்டும் என்பதே நாட்டு மக்களின் அபிலாஷைகளாகும்.

அதற்கு கை கொடுக்க காத்திருக்கும் இந்தியா போன்ற நாடுகளின் உதவிகளை பெற்று அதனை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தினால் இலங்கை தொடர்ந்து அதல பாதாளத்தில் விழுவதில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

புதிதாக பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியா, அமெரிக்கா, வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளன. ரணில் விக்கிரமசிங்க நேற்று (13) கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, அலரிமாளிக்கைக்குச் சென்று பூச்செண்டு கொடுத்து வாழ்த்துக்களைத் தெரிவித்து கலந்துரையாடியுள்ளார். அந்தக் கலந்துரையாடலுக்குப் பின்னர், இந்தியா இன்னும் உதவிகளைச் செய்யும் என அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால்தான் என்னவே, எந்தவொரு எம்.பியின் உதவியும் இன்றி, எரிபொருள்களை நாட்டுக்குக் கொண்டுவருவேன் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை பெற்றுக்கொண்டதன் பின்னர் தெரிவித்துள்ளார் என்பதை யூகிக்க முடிகின்றது.





# கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை

## கோட்டைக்கல்லாறு மீனவர் சங்கம் ஆதங்கம்



வ.சக்திவேல்
shagthivel@gmail.com


கோட்டைக்கல்லாறு பகுதியிலுள்ள இந்த கட்டடம் முறையாக புன ரமைத்து பயன்பாட்டுக்கு விடுக்கப்படாமையால், அங்கிருந்து மீன்பிடிக்கச் செல்வோரும், அதன் நிர்வாகத்தின் கீழிருக்கும் மீனவ சங்கமும் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.



இது தொடர்பில், கோட்டைக்கல்லாறு கிழக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தம்பிராசா சிவகுமார், எம்மிடம் சில கருத்துகளை பகிர்ந்து கொண்டார்.

கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் எமக்கு முன்பிருந்த சங்க நிர்வாகத்திடம் இந்தக் கட்டடத்தை 2012 ஆம் ஆண்டு ஒப்படைத்தது. (நாங்கள் அதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகமாகும்) அதிலிருந்து தொடர்சியாக 3 மாதங்கள் காவலாளி ஒருவரை நியமித்து கண்காணித்து வந்தோம்.

எனினும், எமது கடற்றொழில் சீராக அமையவில்லை ஆதலால் கட்டத்துக்கு நியமித்த காவலாளியை விலக்கிக் கொண்டோம். பின்னர் நீர் வசதி, மின்சார இணைப்புத் தடைசெய்யப்பட்டன. திணைக்களம் எம்மிடம் இதனைப் பொறுப்புத் தந்தாலும் இதனை இயக்குவதற்குரிய நிதி வசதியையோ ஏனைய உதவிகளையோ ஏற்படுத்தித் தரவில்லை. மீனவர் தங்குமடக் கட்டடத்துடன் இணைந்ததாக மீனவர்களுக்காக எரிபொருள் (மண்ணெண்ணெய்) நிரப்பு நிலையம் ஒன்றும் புதிதாக அமைத்துத் தரப்பட்டுள்ளது.

எம்மிடம் கையளித்த தினத்திலிருந்து இற்றைவரையில் இதனை இயக்குவதற்குரிய நடடிவக்கையை துறைசார்ந்த திணைக்களத்தினர் ஏற்படுத்தித் தரவில்லை. தற்போது எமது மீனவர் தங்குமடமும், எரிபொருள் நிரப்பு நிலையமும் அழிவடைந்த நிலையில், தூர்ந்துபோய், துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றன.

இனிமேலும் இதனை இவ்வாறு விட்டுவிடாமல் துறைசாந்த திணைக்களத்தினரும், அரசாங்கமும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தூர்ந்துபோயுள்ள எமது மீனவர் தங்குமடத்தை, இயங்காமல் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் உடன் புனரமைப்புச் செய்து தரவேண்டும்.

நாடெங்கிலும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இந்நிலையில் மிக நீண்ட தூரம் சென்றுதான் நாம் எரிபொருளைக் கொள்வனவு செய்து கொண்டு கடற்றொழிலுக்குத் தினமும் செல்லவேண்டியுள்ளது. கடற்கரையிலேயே இருக்கும் இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் சீராக இயங்குமாக இருந்தால் எமக்கு மாத்திரமின்றி இப்பகுதியிலுள்ள சுமார் 5000 மீனவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என்றார்.

முன்பிருந்த எமது மீனவர் சங்கத்திடம் கடற்றொழில் திணைக்களம் இந்த சொத்துக்களை ஒப்படைத்திருந்தாலும், திணைக்களம் புனரமைத்துத் தருமாக இருந்தால், புதிய நிர்வாகத்தால், செவ்வனே கொண்டு நடாத்தக்கூடிதாக அமையும்.

எமது நிலைமை தொடர்பில் கடற்றொழில் திணைக்களத்தின்



உயர் அதிகாரிகளுக்கு நாம் அறிவித்துள்ளோம் அவர்கள் இதுபற்றி இன்னும் கருத்திற்கொள்ளவில்லை. ஏனைய இடங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மிகநீண்ட வரிசையில் நின்றும் மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. கடற்கரையிலே அமைக்கப்பட்டுள்ள இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை இயங்கச் செய்ய வேண்டும். 1000 ரூபாவிற்கு மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்தால் எமக்கு போதாது அவ்வாறு சென்றால் கடலில் தத்தழிக்கும் நிலைமைதான் ஏற்படும் என்றார்.



கோட்டைக்கல்லாறு கிழக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் இ.வினிப்பாலா கருத்துரைக்கையில்...

எமது கடற்கரையில் தற்போதைய நிலையில் 15 இயந்திரப்படகுகள். 20 இற்கு மேற்பட்ட தோணிகள், 10 இற்கு மேற்பட்ட கரைவலைகளும் உள்ளன. இதனை மேம்படுத்துவதற்கு எமது கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை அரசாங்கம் உடன் புனரமைப்புச் செய்து தரவேண்டும். "இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் எமக்கு "கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை" போன்றுள்ளது. தற்காலத்தில் சீரான முறையில் மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை, இதனால் இரண்டு நாட்களுக்கு ஒருமுறைத்தான் கிடைக்கின்றது.

இவற்றால் எமது வாழ்வாதாரம் மிகவும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. எமக்கு ஒரு நாளைக்கு 3,000ரூபாவுக்கு எரிபொருள் தேவை, ஆனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 1000 ரூபாவுக்குத்தான் தருகின்றார்கள் இதனால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. இதிலுள்ள அனைத்து பொருட்களும், களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பில் உரிய திணைக்கத்திற்கும், பொலிஸாருக்கும் தெரிவித்துள்ளோம் என்றார்.

### றுக்சான் சி.குரூஸ் கருத்துரைக்கையில்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் றுக்சான் சி.குரூஸ் தெரிவிக்கையில்...

"அபிவிருத்தி என்பது மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒன்றாக அமைதல் வேண்டும்" மாறாக வெறுமனே திட்டங்களை செய்து முடித்துவிட்டு அனைத்து மக்கள் மயப்படுத்தாமல் விடப்படுமிடத்து அது பயனற்றதாகிப் போய்விடும். எனவே மக்களின் தேவையறிந்து சேவைகளை மேற்கொள்ளும்போது அதன் உச்சப்பயனை பயனுகரிகள் அனுபவிக்க வேண்டும்.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு கடற்கரையில் அப்பகுதியிலுள்ள மீனர்வர்களின் வேண்டு கோளுக்கு இணங்க மீனவர் தங்குமடமும் அதனோடிணைந்த வகையில் மீனவர்களுக்கான



எரிபொருள் நிரப்பு நிலையம் (மண்ணெண்ணெய்) கடந்த 2011 காலப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டு 2012இல் அப்போது மீனவர் சங்கத்தை நிர்வகித்த பிரதிநிதிகளிடம் கடற்றொழில் திணைக்களம் ஒப்படைத்துள்ளது.

எனினும், புதிதாக அமைப்பட்ட குறித்த எரிபொருள் நிரப்பு நிலையம் இயக்குவதற்குரிய எதுவித முன்ஏற்பாடுகளோ, ஏனைய வசதிகளையோ மீனவர் சங்கம் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக இற்றைக்கு 10வருடங்கள் கழிந்த நிலையிலும், அங்கு பொருத்தப்பட்டுள்ள எரிபொருள்நிரப்பு நிலையத்தின் உதிரிப்பாகங்கள் களவாடப்பட்டும், ஏனையவை துருப்பிடித்த நிலையிலும், காணப்படுவதோடு, மீனவர் தங்குமடத்திலிருந்த பொருட்களும், களவாடப்பட்டு, கவனிப்பாரற்று கிடக்கின்றன என்றார்.

கோட்டைக்கல்லாறு கடற்கரையில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் அதனோடிணைந்த கட்டடம் என்பன கடந்த 2011ஆம் ஆண்டு ஐஎவ்ஏடி(IFAD) திட்டத்தின்கீழ் சுமார் 20மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், நிர்மாணிக்கப்பட்டன. அவை கோட்டைக்கல்லாறு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டு 2012ஆம் ஆண்டு முதல் அச்சங்கத்தின் பயன்பாட்டில் காணப்பட்டு வரப்படுவதோடு, அச்சங்கத்திடமேயே இக்கட்டடித்தின் பாவனையும் தங்கியுள்ளது.

மேற்படி கட்டடம் கடிட்டி முடிந்த ஆரம்ப காலப்பகுதியில் பிரதேசத்தில் அதிகளவான மீன்பிடி கலன்கள் காணப்பட்டன. இதனால் மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம் நன்றாக இயங்கி அதிகளவில் இலாபமீட்டியது. தற்போது மீன்படி கலன்கள் குறைவடைந்து மிக குறைவான எண்ணிக்கையில் காணப்படுவதனால் மேற்படி நிரப்பு நிலையம் இயங்க அசாத்தி சூழ்நிலை உருவாகியுள்ளது. mini Harbor project ஊடாக இக்கட்டடத்தை உள்வாங்குவதற்கு எமது கடற்றொழில் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதற்காக அமைச்சரவையின் ஆலோசனைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும் தனியாராகவோ அல்லது அமைப்போ இக்கட்டடத்தை இயக்குவதற்கு அனுமதி கோரினால் எமது பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெற்றபின் இதனைக் கையளிக்க வாய்ப்புண்டு.

இதுபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி கடற்கரையிலும், எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று செயழிந்த நிலையில் காணப்படுகின்றது. மாறாக மாவட்டத்தின் களுவாங்கேணி, பாலமீன்மடு, ஆகிய இடங்களில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன

மக்களின் சொத்துக்களை முறையாக மக்களிடம் ஒப்படைக்க வேண்டியதும், அதனை மக்கள் உரியமுறையில் பேணி அதன் உச்சப்பயன்பாடுகளைப் பெறுகின்றார்களான என்பது தொடர்பில் கவனிக்க வேண்டிதும், பொறுப்பு



அற்புதம் நிறைந்த சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின்

# வைகாசிப் பொங்கல் பெருவிழா



அ . அச்சுதன்
achchuthan.news@gmail.com

இந்து சமய வழிபாட்டு முறையில் கை மேல் பலன் கிடைக்கும் வழிபாட்டு முறையில் சக்கி வழிபாடு மிகவும் பிரசித்தி பெற்றது. இச் சக்கி வழிபாட்டில் அவரவர் செய்யும் கர்ம பலன்களுக்கு ஏற்ப தோசங்கள் ஏற்படும் போது அவற்றுக்கான பரிகாரங்களை செய்து வாழ்வில் நல்ல நிலையை அடையச் செய்யும் வழிபாட்டு முறையில் தற்காலத்தில் மேலோங்கி காணப்படுவது நாக தேவதைகளுக்கான வழிபாட்டு முறையாகும்..

அவ்வாறு தோச நிவர்த்தி மற்றும் வேண்டும் அடியவர்களுக்கு வரங்களை அள்ளி அள்ளிக் கொடுக்கும் சேனையூர் அருள் மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் பெரு விழா – நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053 – சுபகிருது வருடம் வைகாசித் திங்கள் 01ம் நாள் (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 08 மணி 53 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீ வருணகுலப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெறும் ஆரம்பப் பூசை நிகழ்வுடன் ஆரம்பமாகும்.

மடைப்பெட்டி, ஊர்வலம், காவடிகள், பூசைப்பெட்டிகள் சகிதம் சேனையூர் அருள் மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் சென்று அவ்விடமிருந்து தூக்கப்படும் காவடிகள் பூசைப்பெட்டிகளோடு பிரதான வீதியூடாக நாகம்மாள் வீதியை வந்தடைந்து முச் சந்தியில் வைக்கப்படும் முச் சந்தி மடையுடன் ஸ்ரீ நாகம்பாள் ஆலயத்தை சென்றடையும் ஆலய பிரதம அர்ச்சகர் பல்துறைக்கலைஞர் , சோதிடர் , சிவஸ்ரீ அ . அரசரெத்தினம் அவர்களால் பக்தி பூர்வமாக மடைப்பெட்டி வளர்ந்து கையேற்கப்பட்டு தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

கிழக்கிலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பாரம் பரிய கலை, கலாச்சார, இலக்கிய சமய வரலாறுகள் வளர்ந்த மண் என சிறப்பிக்கப்படும் , வர்ணிக்கப்படும் மூதூர் கிழக்கின் கட்டைபறிச்சான் வடக்கு பகுதியில் இயற்கை எழில் கொஞ்சும் சேனையூர் எனும் புண்ணிய பதியிலே அருள் மிகு ஸ்ரீ நாகம்மாள் வீற்றிருந்து அருள்பாளித்து வருகின்றார்.

உலகில் பல்வேறு நாடுகளிலுள்ள வழிபாட்டு முறைகளில் தாம் தரிசிக்கும் தெய்வத்தை கண் கூடாக கண்டு தரிசிக்கும் பாக்கியம் இந்த நாகதேவதை வழிபாட்டில் மட்டுமே காணப்படுவது இதன் சிறப்பாகும். சேனையூர் நாகம்மாள் ஆலயமானது 120 வருடத்திற்கு மேல் வரலாறு அற்புதம் கொண்ட இவ் ஆலயம் வரலாற்றிலே 2 ஆண்டுகள் மட்டுமே எவ் வித பூசை நிகழ்வுகளும் நிகழாமல் இருந்துள்ளது. இதற்கு அப்பகுதியில் இடம் பெற்ற 'கொடும் யுத்த சூழல்' காரணமாகும் ஆனால் ஆலயத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை



இதுவும் ஆலயத்தின் அற்புதம் என்கின்றார்கள். .

திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமில்லாது கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலிருந்து வரும் சகல பக்த அடியார்களும் இந்த வைகாசிப் பொங்கல் திருவிழா காலத்தில் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை செலுத்திச் செல்வது வழமை புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து கூட மக்கள் வந்து தமது உறவினர்களின் வீட்டில் தங்கி இத் திருவிழாவில் கலந்து கொள்வது வழக்கம்.

ஆகம ரீதியான பூசை முறைகள் எதுவுமின்றி சடங்கு முறையை மையமாகக் கொண்ட தனித்துவமான வழிபாட்டு முறையை கொண்ட இந்த ஆலயத்தின் பூசையானது பார்ப்பவர்களை மெய் சிலிர்க்க வைப்பதுடன், உண்மையான நம்பிக்கையையும், பக்கி பரவசத்தையும் ஏற்படுத்தும் வண்ணம் அமைந்திருக்கும்.

பல சகாப்தத்திற்கு மேல் பழமையும், அற்புதங்களும் இடம் பெற்று வரும் இந்த ஆலயத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பது ஆலயத்தின் மூலஸ்தானமாகும். சிறிய ஆசி வடிவிலான இவ் முலஸ்தானம் இன்றும் அப்படியே இருக்கிறது. இதன் பின் புறம் ஒரு புற்றும் அதனை சுற்றி ஒரு வில் வளைவுடனான சுற்று மதிலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த மதிலுக்குள் அமைந்துள்ள புற்று வாயிலாகவே ஆலய அர்ச்சகரால் 'நாகம்மாளுக்கு பால், பழக்கரைசலை வைக்கப்படும். இப்பால், பழ பூசை காண வைகாசி பொங்கல் நாளில் அடியார்கள் முண்டியடித்து காண முயலுவார்கள். அருளுள்ளோர் கண்களுக்கு நாக தெய்வத்தின் அருட்காட்சி கிடைப்பதுண்டு. இந்த அருட்காட்சியில் காணும் நாக தேவதையின் தரிசனம் அருட்பேறு என்றால் அது மிகையாகாது.

**சேனையூர் பதிக்கே வாருங்கள் – ஸ்ரீ நாகம்மாளைப் போற்றுங்கள் தேனாய் இனிக்கப் பாடுங்கள் – தேவி தரிசனம் தருவாள் பாருங்கள்**

என்ற பாடலின் மூலம் தேவியின் தரிசனத்தை சேனையூர் கவிஞர் கவிக்குயிலன் அவர்கள் இவ்வாலயத்தின் மீது பாடிய பாடல் வரிகள் மூலம் கூறியுள்ளார். இவ் ஆலயத்தின் மூல மூர்த்தியாக நாக சிலையும் எழுந்தருளியாக அன்னை புவனேஸ்வரிக்கு ஐந்து தலை நாகம் குடை பிடித்தாற் போல் காட்சிதர அபயவரதம் காட்டி எழுந்தருளியுள்ளார். மேலும் இங்கு ஸ்ரீ வரசித்தி விநாயகர்,சூரிய நாராயணர், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பைரவமூர்த்தி, ஆகிய தெய்வங்கள் பரிவாரங்களாகவும், ஆலய உட்பிரவாகத்தில் சக்திவேல், ஸ்ரீ சந்தான கோபால் சுவாமியும் வழிபடப்படுகின்ற தேவதைகளாக காட்சி தருகின்றனர்.

ஆலய அர்ச்சகர் மஞ்சள் நிறத்துணியினால் வாய், மூக்கு காதுகளை கட்டிக் கொண்டே நாகதேவிக்குரிய சகல பூசை வழிபாடுகளையும் செய்து வருகின்றார். சர்ப்பம் தீண்டியவர்களுக்கு, விசக்கடி சம்மந்தமான நோயாளர்களுக்கும், புத்திர பாக்கியமற்றோர், திருமணதடையுடையோர் ஆகிய தோஷமுள்ளோர்களுக்கு பரிகாரங்கள் அர்ச்சகரால் மேற்கொள்ளப்படும்.

தாம் அன்னையிடம் வேண்டி நேர்த்திக்கடன் வைக்கும் அடியார்கள் தமது வேண்டுதல் நிறைவேறிய பின் அந்த நேர்த்திக் கடனை செலுத்துவதற்காக இத் திருவிழா காலத்தில் பெருந்தொகையானவர்கள் ஆலயத்தை நாடி வருவதை அவதானிக்கலாம்.

திருவிழாக் காலங்களை விட ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழைமைகளில் ஆலயத்தில் விசேடமான பூசைகள் இடம்பெறும். இவ்வாலயத்தில் கட்டப்படும் மஞ்சள்நிற வேளை நூலுக்கு மிகவும் மகத்துவமான சக்தியுள்ளது. என அடியார்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான அற்புதங்கள் நிறைந்த சேனையூர் அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடத்திற்கு ஒரு நாள் இடம் பெறும் வைகாசிப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான நாகம்மாளின் அருளாசியைப் பெற்றுக் கொள்ளுமாறு பக்தர்களை அன்போடு அழைக்கின்றனர் ஆலய அறங்காவல் சபையினர்.

மேற்படி பொங்கல் பெருவிழாவன்று கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வும், சைவ நற்சிந்தனையும் இடம்பெருகின்றமையும் மதிய வேளை அன்னதானமும் வழங்கப்படுவதும் குறிப்பிடதக்கது.

**பாலை குருந்தையும், பாங்குடன் ஆலையும் பக்கமெல்லாம் மரச்சோலைகளும் கூடியே வீதியை கூடாரம் போற்சுற்றி கூட்டமாய் நிற்பதைக்காண நீவீர் சேனையூர்ப் பதிக்கே வாருங்கள் நாக தேவி தரிசனம் தருவாள் பாருங்கள் என்ற பாடல் அற்புதமானது.**



# நீதிக்கான போராட்டம் நிலை தடுமாறக் கூடாது



ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com

**நாட்டிலும் வீட்டிலும் அமைதி தானாக வருவதில்லை. அமைதிக்காக உழைக்கவும், அதற்குத் தயாராகவும்., நீதியும் சமத்துவமும் நேர்மையும் இருக்க வேண்டும். தலைவிரி த்தாடுகின்றன.**

அடிப்படையில் ஏற்பட்ட கோளாறுகள்தான் இப்பொழுது நாட்டை அமைதியற்றதாக்கியிருக்கிறது.

சிங்கக் கொடியும் சிங்களம் மட்டும்தான் சட்டமும் தேசிய கீதத்தை தமிழில் பாடக் கூடாது என்பதும் ஹலால் எதிர்ப்பும் ஹபாயா வெறுப்பும் சிங்ஹ லே (சிங்கள இரத்தம்) ஸ்டிக்கர் ஒட்டும் பிரசாரமும், வத கொத்து, (கருத்தரிப்பதை தடை செய்யும் கொத்து) வத யட்ட அந்தும் (கருத்தரிப்பதை தடை செய்யும் பெண்களின் உள்ளாடைகள்) மாடு அறுப்புத் தடை, பள்ளிவாசல்கள் கோயில்கள் இருந்த இடங்கள் பௌத்த புனிதப் பிரதேசங்களாக பிரகடனம், காதி நீதி மன்றங்களை இல்லாதொழித்தல், ஷரீஆ சட்டத்தை தடை செய்தல், இஸ்லாமிய பாடப் புத்தகங்களைத் திரும்பப் பெறல், பள்ளிவாசல்களைக் குறைத்தல், அறபு குர்ஆன் ஓதல் மத்ரசாக்களை இல்லாதொழித்தல் , தொல் பொருள் இடங்களை புதிது புதிதாகப் பிரகடனப்படுத்தல் என்பவற்றோடு கடைசியாக ஒரே நாடு ஒரே சட்டம் குழுவை நிறுவி அதற்கு நீதிமன்றத்தால் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்ட ஞானசாரரை நியமித்தது வரை இலங்கையின் இனவாதப் போக்கு நீண்டு கொண்டேயிருந்தது.

உண்மையில் இவ்வாறான இனவாத சிந்தனைகளில் கவனம் செலுத்தி அழிவுகளை ஏற்படுத்தியதை விட இலங்கையின் பொருளாதார வங்குறோத்து நிலைமையை எவ்வாறு சீர் செய்யலாம் என்பது பற்றி ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தியிருந்தால் மக்கள் பட்டினி நிலைமையில் தெருவுக்கு வந்து போராட்டம் நடத்தி அதன் மூலம் வன்முறைக்குள்ளாக்கி இப்பொழுது நாடு தீப்பற்றி எரியும் நிலையைத் தவிர்த்திருக்கலாம்.

நாட்டிலும் வீட்டிலும் அமைதி தானாக வருவதில்லை. அமைதிக்காக உழைக்கவும், அதற்குத் தயாராகவும்., நீதியும் சமத்துவமும் நேர்மையும் இருக்க வேண்டும். நீதிக்கும் அமைதிக்குமான குரலாக அரசாங்கம் ஒலிக்க வேண்டும். மக்கள்படும் வேதனைகளை அரசு புரிந்து கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள்படும் துயரங்களையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும். மேலும் மக்களுக்கு நீதி, சமத்துவம் நேர்மை ஆகியவற்றுக்காக அரசு ஆர்வமாகவும் நேர்மையாகவும் செயல்பட்டால். அமைதிக் கனவு நனவாகும். நாட்டில் அமைதி நிலவும்.

இன்று நமது நாட்டில் அழிவுகரமான சுய நலன்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. எல்லா இடங்களிலும் அமைதி விரும்பப்பட்டாலும் நீதி, உண்மை மற்றும் நேர்மை இல்லாமை அமைதியை சாத்தியமற்றதாக்குகிறது.

பொது நன்மைக்கான தார்மீக மற்றும் புறநிலை தேவைகளுக்கு ஏற்ப சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். எந்தவொரு தனி இனம், அல்லது பாலினத்திற்கு வேறு யாரையும் ஆதிக்கம் செலுத்த உரிமை இல்லை என்பதை அரசாங்கம் நம் நாட்டில் சாத்தியமாக்க வேண்டும். அனைத்து குடியினரும் ஒரே அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் மற்றும் ஒரே வர்க்கம் மற்றும் கண்ணியம் கொண்டவர்கள்.

இப்பொழுது அநேகரது இதயங்களில் காயமும் கண்ணீரும் உள்ளது. இந்நாட்டின் குடிமக்கள் என்ற முறையில், இந்த நாட்டை ஒற்றுமையாக வைத்திருக்க அவர்கள் வலிகளுடனும் துக்கங்களுடனும் வேதனைப்படுகிறார்கள்.

அப்பாவி மக்களின் இரத்தம் நீதிக்காக அழுகிறது. நம் நாட்டில் அநீதியும், ஊழலும் அதிகம். அதனால்தான் நீதி தடுமாறுகிறது.

நீதி இல்லாமல், அமைதி இருக்க முடியாது. மக்களிடையே நல்லிணக்கத்திற்கு நீதி மிகவும் அடிப்படை மற்றும் குறைந்தபட்ச தேவையாகவுள்ளது. சமூகங்களுக்கு இடையே உள்ள சரியான உறவுதான் அமைதியின் வேர்.

நீதியின் முகமூடிக்குள் செல்பவைதான் ஏராளம். அனைத்து மக்களினதும் மனித சுதந்திரம் மற்றும் மனித கண்ணியத்தின் புனிதமான உரிமையை அங்கீகரித்துப் பாதுகாக்க வேண்டும் என்பது நீதிக்குத் தேவைப்படுகிறது.

எந்தவொரு அரசாங்கமும் தனது குடிமக்களுக்கு பாதுகாப்பையும் நலனையும் வழங்குவதே முன்னுரிமையாகக் கொள்ள வேண்டும். மேலும் நாடு அமைதியாக இருக்க வேண்டுமெனில் நீதி பொது நம்பிக்கை, நேர்மை, பொது சமத்துவம் இருக்க வேண்டும். மக்கள் ஒருவருக்கொருவர் சகித்துக்கொள்ள வேண்டும். ஒருவரையொருவர் நேசித்து, அவர்களின் இனம், மதம் மற்றும் வசிக்கும் இடம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

அரசாங்கம் அமைதிக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் ஒழிய, நீதி, நியாயம், சமத்துவம் உள்ள அமைதியான நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

எனவே, அமைதி நிலவுவதற்கு நமது நாட்டின் சட்டத்தையும் நீதியையும் பின்பற்ற வேண்டிய கடமை நமது அரசுக்கு உள்ளது.

நாம் நிம்மதியாக இருந்தால், அமைதி என்பது மனித இனத்தின் முதன்மையான நன்மையாக இருக்கும்.

மனித குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமான மற்றும் பிரிக்க முடியாத சுதந்திரமும், நீதியுமே அமைதிக்கான அடித்தளமாகும். நீதிக்காகவும் அமைதிக்காகவும் உழைப்பது, அத்தகைய வேலையைச் செய்யத் துணியும் எவராலும் நிச்சயமாக தியாகத்தை உள்ளடக்கியிருக்கும்.

அரசாங்கம் சமூக உறவை ஒருங்கிணைக்க வேண்டும். எந்த ஒரு இனம் அல்லது மதம் அல்லது வசிப்பிடம் உள்ளிட்ட ஒரு மனிதனின் உரிமையைப் பயன்படுத்துதல் மற்றவர்களுக்கு அவர்களின் சொந்த உரிமையைப் பயன்படுத்துவதில் அச்சுறுத்தலை ஏற்படுத்தாது, அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்குத் தடையாக இருக்காது. அனைவரின் உரிமைகளும் மீறப்பட்டிருந்தால் அது பாதுகாக்கப்பட வேண்டும். அவை முழுமையாக மீட்கப்பட வேண்டும்.

அநீதி தொடரும் இடத்தில் அமைதி நிலவ முடியாது. நாட்டின் நலனை மனதில் கொள்ளாத, திறமையற்ற ஊழல்வாதிகளை நியமித்து அவர்களை அழித்துக் கொண்டிருப்பது நம் தலைவர்கள்தான்.

தங்களை நியமித்தவர்களிடமிருந்து பணத்தையும், தனக்காகவும் பணத்தைத் திருடித் திரும்பக் கொடுப்பவர்களை, நாட்டைப் பற்றிக் கவலைப்படாமல் ஒரு மனிதனின் செல்வத்திற்குத் தங்களுக்கு விசுவாசமானவர்களை நியமிக்கிறார்கள்.

நம் தலைவர்கள் அனைத்தையும் அழித்து விடுகிறார்கள். அரசாங்கம் மக்களின் அப்பாவித்தனத்தை வைத்து விளையாடுகிறது, அவர்கள் உண்மையாகவோ அல்லது தீவிரமாகவோ இல்லை. அவர்கள் அதை நடவடிக்கையுடன் ஆதரிக்காமல் வெறும் அறிக்கையை வெளியிடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

கடந்த 30 வருடங்களாய் வன்முறைகளை அனுபவித்து கதிகலங்கிப் போய் நிற்கின்றது நம்தேசம்.

திரும்புமிடமெல்லாம் கண்ணீரும் கம்பலையும் கதி கலங்கும் நெருக்கடிகளும் நோவினைகளும்.இங்கு எல்லா வகையான வன்மங்களும் தலைவிரித்தாடுகின்றன.

கேட்பார் கவனிப்பாரின்றி தட்டழிந்து கிடந்த நம் தேசம் மீண்டெழுந்து சற்று நிம்மதிப் பெருமூச்சுவிடுவதற்கு நிமிர்ந்து பார்க்கையில், மீண்டும் தலைவிரித்தாடுகிறது பஞ்சமா பாதகங்கள்.

இனியும் இழப்பதற்கு எதுவுமில்லை என்று ஏங்கித் தவிக்கின்ற நமக்கு இனியும் எதுதான் கைகொடுக்கப்போகின்றது.

இனத்தால், மதத்தால், மொழியால் பிளவுபட்டுப்போன நம் தேசத்தை இணைக்க இன மத மொழி பேதங்களுக்கப்பால் எது உதவப் போகிறது.

**கண்கள் கனக்கிறது, நெஞ்சம் நனைகிறது. நின்று போகிறது.**

# தோப்பாக நினைக்கும் தனி மரத்தின் முன்பாகவுள்ள சவால்கள்

சில பழமொழிகளின் அர்த்தத்தை மிக ஆழமாக சிந்தித்து, சுய தர்க்கத்துக்கு உட்படுத்தி கொண்டோமெனில், பல சிக்கல்களை அவிழ்த்துவிடலாம். நமது நாட்டைப் பொறுத்தவரையில், அரசியலில் அவ்வாறு ஒன்றுதான் அரங்கேற்றப்பட்டுள்ளது.

சமூகத்தில் தனிமையில் ஒருவராக வாழ முயற்சி செய்தால் அது பெரும் வெற்றிக்கு வழிசமைக்காது. ஆனால் பலரும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்தால் வாழ்வில் பெரும் வெற்றி கிட்டும் என்ற அர்த்தத்துக்கான பழமொழிதான் “தனி மரம் தோப்பாகாது” என்பதாகும்.

இலங்கையின் அரசியலை பொறுத்தவரையில், உலக அரசியல் அரங்கில் எங்குமே நிகழாதது நிகழ்ந்துள்ளது. அதாவது, இறுதியாக நடந்த பாராளுமன்றத் தேர்தலில், எந்தவொரு தொகுதியையுமே வெற்றிகொள்ளாது, முழு ஆசனங்களையும் இழந்து, கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் அடிப்படையில், தேசியப் பட்டியலின் ஊடாக நியமன எம்.பியாக வந்த ஒரேயொருவர் பிரதமராக்கப்பட்டுள்ளார்.

நாடு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமாயின், அரசியல் ஸ்திரத்தன்மை இருக்கவேண்டும். எதிர்க்கட்சியினரும், ஆளும் கட்சியிலிருந்து விலகி பங்காளிகளாக இருப்போரும், பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வதற்காக நிபந்தனைகளை விதித்திருந்தனர்.

இந்நிலையில்தான், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். தனிமரமாக நியமிக்கப்பட்டார். தான் செல்லவில்லை. தன்னை ஜனாதிபதி அழைத்தார், என ரணில் கூறுகின்றார்.

ரணிலுக்கு ஆதரவளிக்கமாட்டோமென, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, விமல், கம்மன்பில ஆகியோர் உள்ளடங்கிய குழு-10, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன வெளிப்படையாக தெரிவித்துவிட்டன.

ஆக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிப்போர் மட்டுமே பிரதமருக்கு ஆதரவளிக்கவேண்டும். அதிலும் இரண்டு நிலைப்பாடுகள் இருப்பதாகவே அறியமுடிகிறது. எனினும், இ.தொ.கா., ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) ஆகியன ஆதரவுக்கரம் நீட்டியிருப்பதாக அறியமுடிகிறது.

இவற்றுக்கெல்லாம், எதிர்வரும் 17ஆம் திகதியன்று கூடும் பாராளுமன்றமே பதில் சொல்லும். எனினும், இரண்டு பக்கங்களிலும் தனக்கு பெரும்பான்மை இருப்பதாக புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பதவியேற்ற ஒருசில நிமிடங்களிலேயே பகிரங்கமாக அறிவித்துவிட்டார்.

அரசியல் காய்நகர்த்தலில் இராஜதந்திரத்தின் வகிபாகத்தை குறைத்து மதிப்பிடமுடியாது. அதில், பழம் தின்று கொட்டை போட்டவர்தான் ரணில் விக்கிரமசிங்க என்பதை மறந்துவிடவும் கூடாது. இராஜதந்திரிகளின் வாழ்த்துக்கள் மற்றும் சந்திப்புகள் தனிமரத்துக்கு ஊரமூட்டுபவையாகவே அமைந்திருக்கின்றன.

அவ்வாறான தனிமரத்துக்கு முன்பாக பல சவால்கள் உள்ளன. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காண்பிப்பது, பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, மக்களின் வரிசையை குறைப்பதல்ல, இல்லாமற் செய்வது, மூவேளையும் உணவு உண்டு வாழக்கூடிய நிலைமையை உருவாக்குதல், இவற்றுக்கு இடையில் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம்.

அந்த சவால்களை எல்லாம் எதிர்கொண்டு வெற்றிநடை போட்டு, தனிமரத்தை தோப்பாக்க வேண்டியதே, புதிய பிரதமர் ரணில் முன்னிருக்கும் பாரிய சவாலாகும் என்பதை நினைவூட்டுகிறோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சகல உயிர்களையும் சமனாக மதித்து, எந்தவித எதிர்பார்ப்புகளுமற்ற பரோபகார சிந்தனையுடன் மனம், வாக்கு, தேகத்தால் தீங்கு வளைவிக்காதவராய் மாறாத, திட நோக்குடன் இருப்பதே தவத்தின் வடிவமாகும்.

குறித்தவோர் ஆற்றலை வளர்ப்பதற்காக மன ஒடுக்கம் அத்தியாவசியமாகின்றது. புலனடக்கத்தைத் தூய சிந்தனை உண்டாக்குகின்றது.

இந்தப் புலனடக்கத்தை உருவாக்குகின்ற வலுமிக்க ஆற்றலை, “தவம்” ஏற்படுத்த ஏதுவாகின்றது. தவக் கோலத்தில் இருந்தால் மட்டுமே, இறைவன் கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதில்லை. சாதாரண நிலையிலுள்ள எந்த மனிதரும், தம் நல்ல இயல்புகள் மூலம் எல்லோரையும் போல, படைத்த கடவுளால் ஆசிர்வதிக்கப்படுகின்றார். இறைவனுக்கு எல்லோரும் சமம்.

–பருத்தியூர் பாலவயிரவநாதன்

லக்ஸ்மன்

# பிரதமர் ரணிலை ஏன் நம்பவேண்டும்

ரணில் விக்கிரமசிங்கவை நாம் மிகச் சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது, இது ரணிலின் விளையாட்டல்ல. ரணில் என்ற புரோக்கரை வைத்து மேற்குலகம் ஆட்டம் ஆரம்பித்திருக்கிறது. இவ்வாறு ஒரு சிலரிடம் கருத்திருக்கிறது. இன்னும் பலர் ரணில் இதற்குச் சரிவரமாட்டார். இவரை பிரதமராக்கியது முட்டாள்தனம். வீண் வேலை என்றெல்லாம் வடிவேலு பாணியில் முணுமுணுக்கிறார்கள்.

ஆனால், புதிய பிரதமர் ரணிலிடம் மக்கள் போராட்டத்தின் பிரதிநிதிகள் 8 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய பிரகடனத்தை நேற்றையதினம் கையளித்துள்ளதுடன் இவையெல்லாம் ஓய்ந்தேதான் போகவேண்டும்.

“கோட்டா கோ கம” என்று ஜனாதிபதி பதவி விலகுவதையே முதலாவது கோரிக்கையாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், அதிகபட்சம் 15 அமைச்சர்களைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்று 18 மாதங்களுக்கு ஸ்தாபிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

ஏனைய 14 அம்சங்களில், அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு, 20 ஆம் திருத்தம் நீக்கப்படுவதுடன் 21ஆம் திருத்தம் புதிதாக கொண்டுவரப்பட வேண்டும். பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கும் வகையில் ஒரு நிவாரண வரவு -செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும், அதில் விளிம்பு நிலையிலுள்ள மக்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட வேண்டும் தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் கணக்குகள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். நிதி ரீதியிலும், வேறு வகையிலும் மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பில் வெளிப்படையான கண்காணிப்பு இருக்க வேண்டும். இலங்கை வாழ் பிரஜைகளின் அடிப்படை உரிமையான உயிர் வாழ்வதற்கான உரிமை உறுதி செய்யப்பட வேண்டும். சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்கள் உறுதி செய்யப்பட வேண்டும் என்றாகிவிட்டது.

இது எல்லா சிங்கள அரசாங்கங்களும் தமிழருக்குத் துரோகத்தையே செய்திருக்கிறார்கள் என்று தமிழர்களிடமிருக்கும் கருத்துக்கு நேரெதிரானதுதான்.

இலங்கையில் ஐந்து முறை பிரதமராக இருந்துவிட்டு இப்போது ஆறாவது முறையாக பிரதமராக பதவியேற்றிருக்கும் ஒருவரை நாம் சாதாரணமாக எண்ணிவிட முடியாது. 69 லட்சம் மக்கள் வாக்களித்து பெரும் ஆணையுடன் ஆட்சிக்கு வந்த ஒருவரை தூக்கி எறிந்த மக்களுக்கு, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் ஒருவர்தான் நிவாரணம் கொடுப்பதற்கு உதவப் போகிறார். இதுவே உலகியல் யதார்த்தம். இதைத்தான் “கழித்த கல்லே அத்திபாரத்துக்கு உதவும்” என்பார்கள்.

இலங்கையும் ஒருவகையில் பூஜை செய்து கல்வைத்து அத்திபாரத்திலிருந்து ஆரம்பிக்கும் நிலையிலேயே இருக்கிறது. இதனை எல்லோரும் ஏற்றுக் கொள்வர். ஆறாவது தடவையாக பிரதமராகி தனது உலக சாதனையை தானே முறியடித்திருக்கிறார் ரணில் என்று சொன்னாலும் அவரே நாட்டை தூக்கி நிமிர்த்துவதற்கு உரித்தானவர் என்ற நம்பிக்கை பெருமளவு மக்களிடம் இப்போதே வந்திருக்கிறது.

அரசியலில் வீழ்ச்சி சர்வ சாதாரணமானதுதான் என்பதற்கும் ரணில் விக்கிரமசிங்கவே சாட்சி. இருந்தாலும், பல தடவைகளில் தானே ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடும் நிலை ஏற்பட்ட போதும் அதனைத் தவிர்த்து ஏனையவர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருந்தவர் ரணில். 2015ஆம் ஆண்டு கூட ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு நேரெதிராக சு.க பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவை களமிறக்கி வெற்றிபெறவும் செய்த கூட்டணியின் முக்கியமானவர் இப்போது இடிந்து தள்ளாடி விழுந்துவிட்ட அரசாங்கத்தினை பொறுப்பேற்றிருக்கிறார் என்பது விந்தையே.

2020 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை சுடுகாட்டை நோக்கி வழிநடத்திய புகழுக்குரியவராகப் பார்க்கப்படும் ரணில் தனது கட்சியை தூக்கி நிறுத்தவேண்டிய நிலையில் உள்ளார். இது அவருக்கு மாத்திரமல்ல ஐ.தே. கவின் அனைத்து உறுப்பினர்களுக்குமான பணி. அந்த முழுமையான பணியையும் பழியையும் ரணில் சுமக்கிறார். சுமக்கவும் போகிறார்.

ஒரு சில ஆண்டுகளில் தோற்றம் பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சி தேசிய கட்சியாக நாட்டில் இருந்த இரண்டு பிரதான கட்சிகளையும தூக்கி விழுங்கிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால், அந்தக் கட்சி அரசாங்கத்தை அமைத்து, இரண்டு வருடங்களில் மண் கவ்விவிட்டது. அரசியல் அனுபவமற்றவர் தலைமைப்பீடத்துக்கு வந்தமர்ந்ததனால்தான் என்று சிறு பிள்ளையும் சொல்லும் அளவிற்கு அவரால் கொண்டுவரப்பட்ட திட்டங்களின் தோல்வி எடுத்துக்காட்டிவிட்டன.

ஆனால் இப்போது எடுத்திருக்கும் முடிவு சிறப்பானது என்று வரலாறு சொல்லட்டும். ரணிலை ஒரு நரியாக வர்ணிப்பதுதான் வழமை. ஆனால் திருடனைப் பிடித்து கிராமசேவை உத்தியோகத்தர் பதவியைக் கொடுத்ததை கிராமங்களில் சிலவேளைகளில் உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வது வழமை. கோட்டாவை வீட்டுக்குப் போகச் சொல்லி போராட்டம் நடத்துபவர்கள் நிதி மோசடி இல்லாத ஆட்சியை விரும்புகிறார்கள் என்றால் முதலில் நிதி மோசடியில் ஈடுபட்டவர்கள், ஈடுபடுகின்றவர்கள் கண்டுபிடிக்கப்படவேண்டும். தண்டிக்கப்படவேண்டும்.

ஆசியாவிலே இருக்கும் மிகத் திறமையான அரசியல்வாதியாக பார்க்கப்படுகின்ற ரணில் பிரதமராகப் பதவியேற்றவுடனேயே பல நாடுகளின் தூதுவர்கள், வாழ்த்துத் தெரிவிக்கின்றன.

இவையெல்லாமே ஒருவித சமிக்ஞையே. இந்த சமிக்ஞைகளை நாடு புரிந்து கொள்ளவேண்டும். இப்போதைய நிலையில் நாட்டை மீட்கக் கூடிய, சிறப்பாக வழிநடத்தக்கூடிய, அனுபவமுள்ள ஓர் அரசியல்வாதி தேவை. இந்தக் கட்டாயத்தினைப் புரிந்து கொள்ளாதிருப்பது அரசியலில் முட்டாள்தனமாகவே இருக்கும்.

நாட்டில் உற்பத்தி வீழ்ச்சி கண்டுவிட்டது. உற்பத்தி செய்துகொள்ளவும் வழியில்லை. இறக்குமதிகளே நம் நாட்டுக்கு பொருள்களைக் கொண்டுவரும். இவ்வாறிருக்கையில் ஒன்றுமில்லாத நாட்டை யார்தான் பொறுப்பேற்பார்கள். அனுரகுமார திசாநாயக்க, சஜித் பிரேமதாச, டளஸ் அழகப்பெரும என பெரும் பட்டியல் இருந்தாலும் இவர்களில் யார் நாட்டின் இப்போதைய நிலையை எதிர்கொள்ளக்கூடியவர்கள் என்பதே முதல் கேள்வியாகும்.

தமிழ்த் தரப்பு சார்ந்து பார்த்தோமானால், தமிழர்களுக்கு ராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன நிலைதான். ஆனால் ஒரு சில தமிழ்த் தரப்பினைச் சேர்ந்தவர்கள் கடந்த நல்லாட்சியில் ரணிலினைக் காப்பாற்ற ஒரேபிடியாக நின்றுவிட்டு இப்போது ரணிலுக்கு எதிர்ப்பினைக் காண்பிக்கின்றனர். இவ்வாறானவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருப்பதற்கு எவ்விதத்தில் தகுதிபெற்றவர்கள் என்பது கலந்துரையாடப்படவேண்டியது. பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றைய தினம் முன்வைத்திருக்கின்ற 8 அம்ச கோரிக்கைகளிலும் சரி, இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட 13அம்சக் கோரிக்கைகளிலும் சரி, “கோட்டா கோ கம” போராட்டத்தின் கோரிக்கைகளிலும் சரி தமிழ் மக்களின் 70 ஆண்டுகாலப் போராட்டத்துக்கான தீர்வு பற்றிய பேச்சே இல்லை. இவ்வாறிருக்கையில், தமிழர்கள் விடயத்தில் எவ்வாறான ஏற்பாடு அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது என்பதுதான் கேள்வி.

அந்த வகையில்தான் தமிழ் மக்களின் வாக்குகளால் பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரிப்பவர்கள் தமிழ் மக்களின் அரசியல் கனவை அரசியல் யதார்த்தமாக மாற்றுவதற்காகவே உறுதியெடுக்கவேண்டும். இல்லையானால், அதற்கான அர்த்தம் எதுவுமற்றாதாகவே இருக்கும். சர்வதேச அழுத்தங்கள், தன்னையும் தன்னுடைய குடும்பத்தையும், ராஜபக்ஷ சகோதரர்களையும் காப்பாற்றக் கூடியவராக ரணிலை கோட்டபாய ராஜபக்ஷ நியமித்திருந்தாலும். அதுவும் இப்போதைக்கு இலங்கைக்குத் தேவையானதே. சர்வதேசங்கள் அழுத்தம் கொடுக்குமளவிலேனும் இலங்கை இருந்து கொண்டிருக்கிறது என்று மகிழ்ச்சி கொள்ளவேண்டிய நிலையில்தான் நாடு இருக்கிறது. இந்த நிலையிலிருந்து மீட்டுத்தரவேண்டிய ஒரு மீட்பராகவே ரணிலைப் பார்க்கவேண்டும்.

ரணில் சர்வதேச ரீதியில் அனைத்து நாடுகளுடனும் உறவாடக்கூடிய இராஜதந்திரியாக இருக்கிறார். அவர் அதனைக் காண்பித்துமிருக்கிறார். இலங்கையில் நடைபெற்ற புலிகளுடனான யுத்தத்தினை நோர்வேயின் அனுசரணையுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஊடாக பலமிழக்கச் செய்து அதனை முடிவுக்குக் கொண்டுவர மஹிந்த தரப்புக்கு பெரும் உதவியைச் செய்தவர் அவரே. இந்த உதவியானது மிகச் சாதாரணமானதல்ல. இதனை சிங்கள மக்களும் புரிந்திருக்கின்றனர். இருப்பினும் வயிற்றிலடித்ததால் ஏற்பட்ட பலாபலனையே ராஜபக்ஷ குடும்பத்தினர் இப்போது அனுபவிக்கின்றனர்.

இந்தத் தோல்வியை அவர் புதிய பிரதமாராக பொறுப்பேற்று மக்களின் தோல்வியாகக் காண்பிப்பார் என்பதே ரணில் மீது நம்பிக்கை கொண்டவர்களின் கருத்தாக இருக்கிறது. இந்த நம்பிக்கை வெற்றிபெறவேண்டும்.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை, புதிய பிரதமராக பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் பெரும்பான்மை நிருபிப்பு, மேலும் களமிறங்கவிருக்கின்ற பிரதமர் வேட்பாளர்களின் பெரும்பான்மை நிருபிப்புகளுக்கான முயற்சிகளுடன் நிறைவுக்கு வரும். இருந்தாலும் அரசியலில் குள்ளநரியாக பார்க்கப்படுகின்ற ரணிலின் அரசியல் ராஜதந்திரம் வெற்றிபெறவேண்டும் என்று நம்புவோமாக!

## கடிதங்கள்

### ஆசிரியர்கள், மாணவர்கள் அவதி

இரத்தினபுரி மாவட்டத்தை பொறுத்தவரையில், பரவலாகவே போக்குவரத்து சீர்கேடுகள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

இந்நிலையில், அமுல் படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம், நேற்று (13) காலை 6 மணியுடன் தளர்த்தப்பட்டிருந்தாலும், பஸ் போக்குவரத்து முறையாக இயங்கவில்லை. இதனால். ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தொழிலுக்குச் சென்றோர்கள் என பலரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

போக்குவரத்து முறையாக இன்மையால், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்களில் வரவு மிகவும் குறைவடைந்து காணப்பட்டது. பாடசாலைகளிலும் மாணவர்களின் வரவும் வீழ்ச்சி அடைந்திருந்தது. பாடசாலைகளுக்கு வருகைதந்திருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கையும் திருப்தியடைவதாய் இல்லை.

கடும் சிரமங்களுக்கு மத்தியில், பாடசாலைகள் மற்றும் வேலைகளுக்குச் சென்றிருந்தாலும், நேற்று (13) பிற்பகல் 2 மணிக்கு ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டமையால், தத்தமது வீடுகளுக்கு திரும்புவதிலும் கடும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். எனவே, ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தி தளர்த்தப்படும் காலங்களில் கடமைகளுக்கு செல்லும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அத்தியாவசிய தேவைகளுக்காக செல்வோரின் நலன் கருதி போக்குவரத்து சேவைகளை முறையாக பஸ் அமுல்படுத்த வேண்டும். அல்லது வேறு மாற்று வழிமுறையை நடைமுறை படுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

( சிவா ஸ்ரீதரராவ்)

சுப்பிரமணியம் பாஸ்கரன்
yathubashkaran@gmail.com

# விழிப்புணர்வு அவசியம்




இலங்கையில் நீண்டகாலமாக தொடர்ந்த உள்நாட்டுப்போரின் போது மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக வடக்குப் பிரதேசம் காணப்படுகின்றது.

இப்பகுதிகளில் யுத்தகாலத்தில் பயன் புடுத்தப்பட்ட கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் 13 வருடங்களுக்குப் பின்னரும் மீள்குடியேறிய மக்களுக்கு அச்சுறுத்தலாகவே உள்ளன. இவ்வாறு 13 வருடங்கள் கடந்தாலும் இந்த வெடிபொருட்களின் ஆபத்துக்களை இன்னும் பலர் உணர்ந்து கொள்ளாத நிலைகானப்படுகின்றது. வெடிபொருட்களை சட்டவிரோதமாக எடுத்து அவற்றிலிருந்து மருந்துகளை பிரித்தெடுக்கும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது கிளிநொச்சி உமையாள்புரம் சோலை நகர் பகுதியில் வெடி பொருளிலிருந்து வெடிமருந்தை பிரித்து எடுக்க முற்பட்ட சமயம் ஏற்பட்ட விபத்தின் போது குடும்பஸ்தர் ஒவரும் கொல்லப்பட்டதுடன் அவருடைய சகோதரரும் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

கடந்த 2009ம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர் மக்கள் மீள்குடியேறுவதற்கும் பயிர் செய்கை நிலங்களில் தமது வாழ்வாதார பயிர் செய்கைகளை மேற்கொள்வதற்கும் ஏற்ற வகையில் வெடிபொருட்கள் அகற்றப்பட்டாலும் இன்னும் சில பகுதிகள் வெடிபொருட்களின் ஆபத்துக்குள் காணப்படுகின்றன.

குறிப்பாக வடபகுதியின் கிளாலி முதல் முகமாலை நாகர்கோவில் வரையான பகுதிகள் மிகவும் வெடிபொருள் ஆபத்து நிறைந்த பகுதிகளாக காணப்படுகின்றன.

யாழ். குடாநாட்டினையும் வன்னிப்பிரதேசத்தையும் இணைக்கின்ற கிளாலி முதல் நாகர்கோவில் வரைக்குமான கிட்டத்தட்ட ஏழு கிலோ மீற்றர் வரையான பகுதி 13 ஆண்டுகளுக்கு மேல் யுத்தம் இடம்பெற்ற பகுதியாகவும் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்புக்களும் எண்ணற்ற மிகவும் பெறுமதி வாய்ந்த உயிர்களை விலையாகக் கொடுத்தன. அத்துடன் ஏராளமானவர்கள் உடல் அபயங்களை இழந்து இன்னும் அங்கவீனர்களாகவும் உள்ளனர். ஆரம்பத்தில் மக்கள் வாழ்ந்த பூர்வீக நிலங்களில் அவர்களால் தமது வாழ்வாதாரத் தேவைகளுக்கு வளர்க்கப்பட்ட வானுயர்ந்த தென்னை பனை மரங்கள், வீடுகள், கட்டடங்கள் ஏராளமான சொத்துக்கள் யுத்தக் காயங்களை தாங்கி சிதைத்து சின்னாபின்னமாகி இன்றும் காணப்படுகின்றன.

தற்போது இவ்வாறு வெடிபொருட்களின் ஆபத்தான பகுதிகளாக காணப்பட்ட பெருமளவான பகுதிகள் வெடிபொருட்கள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடிமயர்விற்கு அனுதிக்கப்பட்டு அவர்களுக்கான இயல்பு நிலை ஏற்படுத்;தப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள முகமாலை, முகமாலை தெற்கு, இத்தாவில் மேற்கின் ஒரு பகுதி என பல்வேறு பகுதிகள் இன்னும் வெடிபொருட்களின் சவால் நிறைந்த பகுதியாக காணப்படுவதுடன் இப்பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாதுள்ளது.

தற்போது இப்பகுதிகளில் மீள்குடியேறுவதற்கு 248 குடும்பங்களைச் சேர்ந்த 900 பேர் வரையில் தமது பதிவுகளை மேற்கொண்டு விட்டு இதனை அண்டிய பகுதிகளிலும் வெளிமாவட்டங்களிலும் வாடகை வீடுகள், உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றன இந்நிலையில் மிகவும் வெடிபொருட்கள் ஆபத்தான பகுதியாக காணப்படுகின்ற பாதுகாப்பற்ற பகுதிக்குள் சென்ற







பலர் வெடிபொருட்களில் சிக்கி உயிரிழந்துள்ளதுடன் உடல் அவயவங்களையும் இழந்துள்ளனர்.

வெடிபொருட்கள் புதைக்கப்பட்ட பகுதியாகக் காணப்படும் இப்பகுதிகளில் பொதுமக்கள் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்ட பகுதியாக அடையாளப்படுத்தப்பட்ட போதும் அவற்றைப் பொருட்படுத்தாது அதற்குள் சென்று வெடி பொருட்களை எடுத்தல் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளுதல் என்பவற்றால் விபத்துக்களில் பலரும் சிக்கிக் கொள்கின்றனர்.

இவ்வாறான விபத்துக்களை தவித்துக் கொள்வதற்கு மக்கள் மத்தியில் பல்வேறு விழிப்புணர்வுகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டபோதும் தற்போது இது தேவையான ஒன்றாகக் காணப்படுகின்றது. வெடிபொருள் ஆபத்துக்கள் என்பது மிகவும் ஆபத்தான ஒன்று இதில் இருந்து ஒவ்வொருவரும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது அவசியம் என்பதை கடந்த கால சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் வெடிபொருள் ஆபத்தான பகுதிகளில் கண்ணிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டியது



அவசியமாகும்.

கடந்த 2009ம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர் வடக்கில் உள்ள 640 கிராமங்களில் 105 மில்லியனுக்கும் மேற்பட்ட நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்றும் அப்போது யுனிசெப் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







இலங்கைக்கு 40,000 மெட்ரிக் தொன் அரிசி

# அரசாணைக்கு தடை விதிக்க மறுப்பு



கடும் பொருளாதார நெருக்கடியில் இருக்கும் இலங்கை மக்களுக்கு உதவிட தமிழக அரசுக்கு, மத்திய அரசு அனுமதியளித்ததையடுத்து, அடுத்தகட்ட நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டுவருகிறது.

இதுமட்டுமல்லாமல் முதல்வர் ஸ்டாலின், `மனிதாபிமான அடிப்படையில் இலங்கை மக்களுக்கு உதவிட நன்கொடை வழங்க வேண்டும்' என மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மேலும், முதல்வரின் நிவாரண நிதிக்கு நன்கொடை வழங்குவோர், 80-G-ன் கீழ் வருமான வரி விலக்கு பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதைத்தொடர்ந்து, இலங்கைக்கு வழங்குவதற்காக 40 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை கொள்முதல் செய்வதாக தமிழக அரசாணை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டம், திருக்கண்ணமங்கை கிராமத்தை சேர்ந்த ஜெய்சங்கர் என்பவரினால் தாக்கல் செய்யப்பட்ட அந்த மனுவில் , ``இந்திய உணவுக் கழகம் 1 கிலோ கிராம் அரிசியை ரூ.20-க்கு வழங்கும் நிலையில், தமிழக அரசு 1 கிலோ கிராம் அரிசியை ரூ.33.50 என ரூ.13.50 கூடுதலாக வாங்குவதால் அரசுக்கு இழப்பு தான் ஏற்படுகிறது.

இதே அரிசியை தமிழக அரசு இந்திய உணவுக் கழகத்திடம் வாங்கினால் ரூ.54 கோடி சேமிக்க முடியும். எனவே இதிலுள்ள மோசடி மீது விசாரணை நடத்தி, அரிசியை கூடுதல் விலைக்கு வாங்கும் அரசாணை மீது தடைவிதிக்க வேண்டும்" என உயர் நீதிமன்றத்தில் மனு அளித்திருந்தார்.

இது தொடர்பாக சமூக ஆர்வலர்கள் கேள்வியெழுப்பிய போது இந்திய அரிசி தரமற்றது எனவும், அரிசி கொள்முதல் செய்வது தொடர்பான தகவல் பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது என அவர் மனுவில் குறிப்பிட்டிருந்தார். எனவே அரசு கொள்முதலுக்கு ஒப்புதல் அளித்து பிறப்பித்த அரசாணைக்கு தடை விதிக்கவேண்டும் எனவும் அந்த மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுவாமிநாதன், மற்றும் செந்தில் குமார் ராம மூர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசரணைக்கு வந்த போது, தமிழக அரசு சார்பில் ஆஜரான அரசு தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம் ஒன்றிய அரசின் அனுமதியுடன் அரிசி அனுப்ப படுவதாகவும், அவசர நிலை நேரங்களில் விலைமனுக்கோர் வெளிப்படைத்தன்மை சட்டத்திற்கு விலக்கு உள்ளதாகவும் தெரிவித்தார்.

`மத்திய அரசின் ஒப்புதலோடு தான் இலங்கைக்கு அரிசி அனுப்பப்படுகிறது. மேலும், பேரிடர் போன்ற காலங்களில் டெண்டர் நடைமுறைகளை பின்பற்றாமல் அரிசி கொள்முதல் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது' என விளக்கமளித்தார்.

அதைத்தொடர்ந்து இந்த வழக்கில், தற்போதைய நிலையில் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது என கூறி வழக்கை ஜூன் மாதத்துக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.







# “ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள்”



விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா
vtsaha123@gmail.com

தன்னைப் பெற்ற தாய் திருமதி பாலநாகம்மா இராசரெத்தினம் அவர்களது 75 ஆவது பிறந்த நாளில் தனது முதலாவது இலக்கிய நூலை வெளியிட்டு வைத்து கௌரவப்படுத்தினார் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன்.

அதுமட்டுமின்றி தனது முதலாவது நூலை அனைவருக்கும் இலவசமாக அன்பளிப்பாக வழங்கிவைத்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரனின் இலக்கிய படைப்பான “ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள்” என்ற கவிதை நூல் வெளியீடு மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச்சங்க கலையரங்கத்தில் கடந்தமாதம் 30 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு தமிழ்ச்சங்க தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் செ. யோகராசா கலந்து சிறப்பித்தார்.

முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி.வே.விவேகானந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



நூலாசிரியர் அறிமுக உரையை தேசபந்து மு.செல்வராசா நிகழ்த்த நூல் வெளியீட்டு உரையை தேசமான்ய விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார்.

நயவுரையை அருட்தந்தை அ.அ.நவரெத்தினம் நிகழ்த்த வாழ்த்துரைகளை டொக்டர்களான புஷ்பலதா லோகநாதன் பா.யூடி ரமேஷ் ஜெயகுமார் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி.க.கலாரஞ்சனி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.குண.சுகுணன் ஆகியோர் கலந்துகொண்டனர். மற்றும் இந்நூலின் முதல்பிரதியினை மட்டக்களப்பு தமிழ்ச்சங்க பொருளாளர் தேசபந்து மு.செல்வராசா பெற்றுக்கொண்டார்.

கதிரவன் த.இன்பராசாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் உள்நாட்டு இறைவரித்திணைக்கள சிரேஸ்ட ஆணையாளர் சட்டத்தரணி மு. கணேசராசாவினால் வரவேற்புரையும், கலைக்கோகிலம் நாட்டியப்பள்ளியினால் வரவேற்பு நடனமும் இடம்பெற்றது.

உரைகளை தொடர்ந்து ஏற்புரையை நூலாசிரியர் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் முரளீஸ்வரன் நிகழ்த்த நன்றி உரையை துணை செயலாளர் திருமதி பிரியா கருணாகரன் நிகழ்த்தினார்.

வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் ஒரு சிறந்த மருத்துவ நிருவாகி மட்டுமல்லாமல் ஓர் உன்னத இலக்கியப்படைப்பாளியுமாவார். 1976ல் யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து 1985ம் ஆண்டுகளின் பின்னர் மட்டக்களப்பில் வாழ்ந்துவரும் இவர் தனது கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும், மருத்துவ பட்டப்படிப்பை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் மருத்துவ நிர்வாக முதுமானியை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவராக 2005ம் ஆண்டிலிருந்து கடமையை தொடங்கி 2013ம் ஆண்டு கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராகி தற்போதுவரை அங்கு தொடர்ந்து பணிபுரிகின்றார்.









மட்டக்களப்பின் அற்புதப் பொக்கிசம்

# மாஸ்டர் சிவலிங்கம்

சின்ன வயசுல எல்லாருக்கும் கதை கேட்கப் பிடிக்கும். அப்படி கதை கேட்க அலையும்போது, யாராவது கதை சொல்வதற்கென்றே வந்தால், ஆகா அற்புதம் அற்புதம் என்று மனம் நினைக்கும் அல்லவா, அதேபோல மட்டக்களப்பு சிறார்களுக்குக் “கிடைத்திருந்த” அற்புதப் பொக்கிசம், மாஸ்டர் சிவலிங்கம்.

மட்டக்களப்பு மண்ணின் பொக்கிஷமாக கருதப்படும் கலைஞர், கதை மாமணி,மாஸ்டர் சிவலிங்கம் மே 11 ஆம் திகதி காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 89. மறுநாள் 12 ஆம் திகதியன்று இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கல்லடி உப்போடை இந்து மயானத்தில் மாலை 4 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

மாஸ்டர் சிவலிங்கத்தை பற்றி எழுதவேண்டுமாயின், அரை பக்கமோ கால் பக்கமோ போதாது, ஏன்? முழுப்பக்கத்தில் கூட அடக்கிவிடமுடியாது. ஒரு தொடர்கதையாக எழுதிக்கொண்டே போகலாம். எனினும், இது அவரை பற்றிய ஒரு சிறு குறிப்பு மட்டுமேயாகும்.

மட்டக்களப்பு மண்ணின் பொக்கிஷமாக கலைத்துறையில் பல்வேறு சாதனைகள் , புரிந்து உலகளவில் பிரசித்தி பெற்ற மிகப் பெரிய கலைஞர் இவர்.

குழந்தைகள் முதல் பெரியோர்வரை சிவலிங்கம் மாமா என்றால் அறியாதோர் யாரும் இல்லை. தனது கலைத் திறமையின் மூலம் பல உள்ளங்களை கொள்ளை கொண்ட அன்பான பண்பான மனிதர் அவர்.

தினபதி சிந்தாமணி பத்திரிகைகளில் ஊடகவியலாளராக பணியாற்றியவர். இலங்கை வானொலியில் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த கதைசொல்லி இவர்.


தனது கதை சொல்லும் திறனால், ஞாயிறுதோறும் மாணவச் சிறார்களை வானொலி முன் கட்டி வைத்திருந்தவர் மாஸ்டர் சிவலிங்கம். சிந்தாமணியில் இவர் வெளிவந்த சிறுவர் இலக்கியம், இவரது கதையை வாசிப்பதற்காகவே பத்திரிகை ஏராளமாக விற்பனை ஆனதாக வரலாறு கூறுகிறது.

இவரது பேச்சில் இருக்கும் நகைச்சுவையும், உடல் மொழி பேசும் நகைச்சுவையும் என்றும் நினைவில் நீங்காதவை.

மட்டக்களப்பில் மாத்திரமன்றி முழு இலங்கையிலும் சிறுவர் இலக்கியத்தின் அடையாளமாகத் திகழ்ந்த மாஸ்டர் சிவலிங்கத்தின் மறைவினால் அவரது அபிமானிகள், அன்பர்கள் மிகுந்த துயரத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அவர் மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாயில் இரத்தினம்_ செல்லத்தங்கம் தம்பதிகளுக்கு மகனாக 1933 மார்ச் 28 இல் பிறந்தார். இவரது தந்தையார் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர் இலங்கையின் சிறுவர் இலக்கிய எழுத்தாளரும்,





பேச்சாளரும் ஆவார். கவிதை,சிறுவர் கதை, சிறுவர் பாடல்கள், வில்லுப்பாட்டு, நகைச்சுவைப் பேச்சு, நாடகம் எனப் பல துறைகளிலும் சிறப்புப் பெற்று இலக்கிய உலகில் பிரபல்யமாகத் திகழ்ந்தார். அவர் மட்டக்களப்பு, கல்லடி உப்போடையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார். சிறுவர் கதை சொல்பவராக, வில்லிசைக் கலைஞராக, எழுத்தாளராக அவர் வலம் வந்தார்.

ஆறு பேர் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவதாகப் பிறந்தார் சிவலிங்கம்.சென் மேரிஸ் பாடசாலையில் ஆரம்பக் கல்வி பயின்றார். ஐம்பது ஆண்டுகளாக சிறுவர் கதைகள் சொல்லும் பணியையே அவர் கடமையாகச் செய்து வந்தார். மட்டக்களப்பு மாநகர சபையில் கதை சொல்லும் கலைஞனாக பணியாற்றியிருந்தார். சென்னை சந்தனு கலைக்கல்லூரியில் ஓராண்டு கார்ட்டூன் கலையும், வில்லிசைக் கலையும் பயின்றுள்ளார் மாஸ்டர் சிவலிங்கம்.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை இவரைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று, இலங்கை வானொலியில் சிறுவர் மலர் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்த சரவணமுத்து மாமாவிடம் அறிமுகம் செய்து வைத்தார். அன்று முதல் இலங்கை வானொலியில் கதை சொல்ல ஆரம்பித்தார். பின்னர் இலங்கைத் தொலைக்காட்சியிலும் இவரது நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. கொழும்பில் இருந்து வெளியான தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் ஊடகவியலாளராகப் பணியாற்றினார்.

மாஸ்டர் சிவலிங்கம் பண்டிதர் பூபாலபிள்ளை என்பவரின் மகள் மங்கையர்க்கரசி என்பவரைத் திருமணம் புரிந்தார். அவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். பயங்கர இரவு, அன்பு தந்த பரிசு, உறைபனித் தாத்தா, சிறுவர் கதை மலர் என பல நூல்களை வெளியிட்டுள்ளார். சிறுவர் இலக்கியத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர் அவர்.

‘அன்பு தந்த பரிசு’ என்ற சிறுவர் இலக்கியத்துக்காக மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருதும் பரிசும் பெற்றிருந்தார்.

‘நகைச்சுவைக் குமரன்’ எனும் பட்டத்தை புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை வழங்கியிருந்தார். ‘வில்லிசைச் செல்வன்’ எனும் பட்டத்தை வித்துவான் பண்டிதமணி வி. சீ. கந்தையா வழங்கிருந்தார்.

‘அருட்கலைத் திலகம்’ எனும் பட்டத்தை கிருபானந்த வாரியார் வழங்கிருந்தார். ‘வில்லிசைச் செல்வர்’ எனும் பட்டத்தை முன்னாள் அமைச்சர் செ. இராசதுரை வழங்கிருந்தார். ‘கலாபூஷணம்’ விருதை கலாசார அமைச்சு இவருக்கு வழங்கியிருந்தது. ‘கலைக்குரிசில்’ விருதை மட்டு இந்து சமய அபிவிருத்தி சங்கம் வழங்கியது. ‘சிறுவர் இலக்கியச் செம்மல்’ விருதை கொழும்பு தமிழ்ச் சங்கம் வழங்கியது.

மட்டக்களப்பு மண்ணின் பொக்கிஷமாக கலைத்துறையில் பல்வேறு சாதனைகள் , புரிந்து உலகளவில் பிரசித்தி பெற்ற மிகப் பெரிய கலைஞர் அவர். குழந்தைகள் முதல் பெரியோர் வரை ‘சிவலிங்கம் மாமா’ என்றால் அறியாதோர் யாரும் இல்லை. தனது கலைத் திறமையின் மூலம் பல உள்ளங்களை கொள்ளை கொண்ட அன்பான பண்பான மனிதர் அவர்.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களில் சிறுவர் இலக்கியம் படைப்பவர்கள் மிகச் சிலரே என்ற நிலையில் மாஸ்டர் சிவலிங்கத்தின் இழப்பு இலங்கைத் தமிழ் இலக்கியத் துறைக்கு பேரிழப்பாகும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 13 மே 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.